

அமரர்

# நாகேஸ்வரி பத்மநாதன்

அவர்களின்

நினைவு குறித்து வெளியிடப்பட்ட

# குமுத மலர்

25.10.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



சைவ வேளாளர் குலத்தைச் சேர்ந்த

அமரர்

# திருமதி நாகேஸ்வரி பத்மநாதன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# குமுத மலர்

**25 - 10 - 2007**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்

குன்றின் மேல் விளக்காக
சுடர்விட்டொளிர்ந்து நின்று
குற்றமற்ற செம்மல்களாய் எமை
வளர்த்து ஆளாக்கி
கணபதி தாள் சேர்ந்த எம்
தெய்வத்தின் பொன்னடிக்கு
குமுத மலரனைய இந்த
நினைவஞ்சலி
காணிக்கை

கணவர், பிள்ளைகள்
சகோதரர்கள்,
உற்றார், உறவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மலர்வு

05 . 11 . 1949



உதிர்வு

25 . 09 . 2007

அமரர்

# திருமதி.நாகேஸ்வரி பத்மநாதன்

அவர்கள்

## திதி வெண்பா

சர்வசித்து வருடமதில் சனிபகவான் புரட்டாதியிலே
இருபதைந்து மதிய செவ்வாய் பக்கமது பூவத்திலே
சதுர்த்தசி திதிகூட நாயகி நாகேஸ்வரி அம்மா
பரமனவன் பாதமலர் புகல் சேர்ந்த நாளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருமுறைத்திரட்டல்



## விநாயகர் வணக்கம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வரை வலமுறை யிறையே.

## தேவாரம் (திருத்தாண்டகம்)

திருச்சிற்றம்பலம்

அங்கமே பூண்டாய் அனலாடினாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் அனேறூர்ந்தாய்
பங்கமொன்றில்லாத படர்சடையினாய்
பாம்பொரு திங்கள் பகைதீர்த்தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவாமூவாச்
சிங்கமே யுன்னடிக்கே போதுகின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற செல்வம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளமே
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னி யதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெ லாம்உ ணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமோ டவல்பொரி
கப்பிய கரிமுகனடி பேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்திமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ டைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல் வோனே
முப்புரமெரு செய் அச்சிவ னுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்தய் ரதுகொடு சுப்பிரமணி படும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனே
அக்கண மணமருள் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி நாகேஸ்வரி பத்மநாதன்

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

சிவபூமி என சிறப்பிக்கப்படும் இயற்கை அழகுமிகு ஈழத் திருநாட்டின் வடக்கே வனப்புமிக்க வன்னிப் பெருநிலப்பரப்பிலே பூநகரியில் கல்வியில் சிறப்புடையோரும் சைவ வேளாளர் உயர் குடியினரும் பொருள் வளம் மிக்கோரும், வாழும் திருத்தலங்கள் அமைந்த செட்டிய குறிச்சி எனும் அழகிய கிராமத்திலே சைவ வேளாளர் குலத்திலே வந்துதித்த சின்னத்துரை எனும் பெரியோனுக்கும் புவனேஸ்வரி எனும் இல்லக் கிளத்திக்கும் (05.11.1949) அன்று மூத்த அருந்தவப் புதல்வியாக நாகேஸ்வரி எனும் நாமத்தோடு இம்மண்ணிலே பிறந்தார். இப் புண்ணிய பூமியிலே இவருக்கு முறையே லோகேஸ்வரி (அமரர்) இராஜேஸ்வரி, நாகராஜா, தர்மசேனா ஆகிய நான்கு சகோதர்கள் ஆவர்.

சிறுவயதிலே சிறந்த புத்திசாலித்தனமும் துடிதுடிப்பும் மிக்க இவர் பெற்றோரிடம் பெரும் மதிப்புடன் கூடிய அன்பையும் சகோதரர்களிடையே அளவற்ற பாசத்தையும் கொண்டு உறவினர்களிடையே நெருங்கிய அன்புடன் விளங்கி நற்குணங்களிலும் கல்வியிலும் மட்டுமன்றி ஏனைய துறைகளிலம் நாட்டம் காட்டித் தேர்ச்சி பெற்று விளங்கினார்.

இவர் J/ Stanly Collegeஇல் கல்வி கற்று 1977ஆம் ஆண்டில் ஆசிரியர் நியமனம் பெற்று யா / கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 1979-- 1982 வரை பயிற்சி பெற்று பயிற்றப்பட்ட ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டார். இதற்கிடையே 1968இல் நெசவு பயிற்சியினை நிறைவு செய்திருந்தார். அதன் பின்பு தமது ஆசிரியர் தொழிலை மேற்கொண்ட இவர். 1977இல் பூநகரி மகாவித்தியாலயத்திலும் 1979இல் யா / ஆசிரியர் கலாசாலையிலும் கல்விப் பணியை மேற்கொண்ட இவர் 1983இல் இவருக்குப் பெரியோர்களால் திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயிக்கப்பட்டது. கோண்டாவிலைச் சேர்ந்த சின்னையா தம்பதிகளின் செல்வப் புதல்வன் பத்மநாதன் என்பவரை திருமணம் செய்து இல்வாழ்வின் பயனாக முறையே கோபிகா, லவகோபன், கௌசிகா, சசிக்கா, தர்சிகா எனும் ஐந்து பிள்ளைச் செல்வங்களைப் பெற்று பாசத்துடன் வளர்த்து வந்தார். பின்னர் 1993-1999 வரை யா / கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்திலும் யா / கோண்டாவில் றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலையிலும் கல்வி கற்பித்து ஆசிரியத் தொழிலிலிருந்து ஓய்வு பெற்றார்.

இவ்வாறு இம்மண்ணில் விளங்கிய இவர் 25.09.2007 அன்று சிவபதம் எய்தினார். அன்பான கணவன், பாசமிகு பிள்ளைகள், பாசம் மிக்க சகோதரர்கள், உறவினர், உற்றார், நண்பர்கள் அனைவரையும் மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட அன்னாரது ஆத்ம சாந்திக்காக எல்லோரும் பிரார்த்திப்போமாக!

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் தாய்

அன்பின் அருளிடம்
ஆற்றலின் இருப்பிடம்
இல்லத்தில் நல்லிடம்
ஈகையில் நிறைகுடம்
உந்துதலின் உயர்விடம்
ஊக்கத்தின் பிறப்பிடம்
எல்லையில்லாப் புகழிடம்
ஏற்றத்தின் சிறப்பிடம்
ஐஸ்வரியத்தின் இருப்பிடம்
ஒழுக்கத்தின் உறைவிடம்
ஓம்பலின் உயர்விடம்
ஔவையின் தேர்விடம்
அஃதே எங்கள் அன்பு
அம்மாவின் இலக்கணம்.

– பிள்ளைகள்.

## தேற்றம்

மண்ணிற் பிறந்தார் யாரிருந்தார்
பறந்தோ போனாய் மனிதா நீ
எண்ணிப் பார்க்கில் இவ்வுடம்பு
என்றோ ஒருநாள் அழியுமடா
கண்ணாற் காண இவ்வுயிரோ
காற்றொடு காற்றாய் அது சென்று
பண்ணிய புண்ணிய பாவவழி
பருடரும் அதற்கேன் பதறுகிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தம் மரபில் தாய்

தாய் என்பது ஓர் உறவுப் பெயரால் அதாவது ஒருவரின் ஆய் தாய் எனப்படுவார்.

இச்சொல்லுக்குத் தமிழில் ஒரு நீண்டகால வழக்குண்டு. நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, ஐங்குறுநூறு முதலாம் சங்கத்தொகை நூல்களில் தாய் என்ற சொல் வருகிறது.

ஞாயும் யாயும் யாரலாகியரோ என்ற பிரசித்தி பெற்ற குறுந் தொகைப் பாடல் வரியில் என் தாய் ஞாய் என்றும் உனது தாய் யாய் என்று குறிக்கப்படுவதை நோக்கல் வேண்டும். இதனால் ஆய் என்பதே விழிநிலையாக இருத்தல் வேண்டும் எனக்கொள்வர்.

இந்த வழக்கில் இருந்துதான் ஆச்சி, ஆத்தை, ஆத்தா என்ற வழக்குகள் வந்துள்ளன. இடையவர் குலப் பெண்களை ஆய்த்தியர் (ஆட்ச்சியர்) என்று கூறும் மரபு உள்ளது.

அன்னை என்பதும் தாயைக் குறிப்பதான சொல்லாகும். இதுவும் சங்க காலத்திலிருந்தே வழக்கிலுள்ளது. ஆனால், விழி நிலையில் அன்னாய் என்றே வரும். அன்னை, அன்னாய் என்ற இரு வழக்குகளும் சங்க இலக்கிங்களிலே காணப்படுகின்றன. ஆய், அன்னை ஆகிய சொற்கள் திராவிடச் சொற்களென நிறுவப்பட் டுள்ளன. (DE-308)

தாய் பற்றிய விழிநிலைக் குறிப்பான அம்மா என்னும் சொல்லும் திராவிடச் சொல்லாகவே இனங்காணப்பட்டுள்ளது. இது பிற்கால வழக்கில் பெருகிக் காணப்பட்டாலும் சங்க இலக்கி யங்களில் அம்மா என்ற தொடர் வராது. அம்ம எனும் சொல் வியப் புக்குறிப்பாக வருகின்றது. ஆயினும் அதன் அடிநிலைப் பொருள் தாய் என்பதேயாகும். அம்மா எனும் சொல் அம்மை, அம்மன் ஆகிய சொல்களுடன் தொடர்பு கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஸ்கிருதத்தில் வரும் அம்பா என்பது அம்மாவோடு தொடர்புடைய வடிவமெனினும் அம்மா எனும் சொல் அப்பா விலிருந்து பெறப்படவில்லை என்பது பரோ, எமனோவால் தெளிவாகக் குறிப்பிடப்படுகின்றது. (DE-154)

ஒவ்வொரு மொழியும் தாய், தகப்பன் போன்ற நெருங்கிய உறவினரைக் குறிப்பதற்கு தன்னிலைப்பட்ட சொற்களையே அமைத்துக்கொள்ள வேண்டுவது தவிர்க்க முடியாத ஒரு பண்பாட்டு நியதியாகும். அது தமிழுக்கும் பொருந்துவதே. ஆயினும் திராவிட மொழிக் குடும்பம் எனும் வகையில் தாய் பற்றிய சொல்லுக்கு இம்மொழிக் குடும்ப வகையில் ஒரு முக்கியத்துவமுண்டு. ஏனெனில், திராவிட மொழிகள் பேசுவோரிடையே குறிப்பாகத் (தமிழ், மலையாளம்) தாய்வழி உரிமை நிலவிற்று. அதாவது தாய் வழியாகவே சொத்துரிமை செல்லும். இதனால் தமிழில் தாயம் என்பது உரிமையைக் குறிக்குமொரு சொல்லாகும்.

மேலும், மற்றைய சக இந்தியப் பண்பாடுகளிலே காணப்படாத அளவிற்குத் தாயகம், தாய்வீடு, தாய்மனை போன்ற சொற்றொடர்கள் உளக் கிளர்ச்சியையூட்டுவனவாக அமைவதை அவதானிக்கலாம். வேரோடி விளாத்தி முளைத்தாலும் தாய்வழி தப்பாது என்பது வடமராட்சியிலே பெருவழக்காகவுள்ள ஒரு பழமொழியாகும்.

நமது பண்பாட்டில் தாய்க்குரிய இடம் யாது? இது பண்பாட்டு உளவியல் சம்பந்தப்பட்ட விடயமாகும்.

தமிழின் இலக்கிய வழக்குப் பாரம்பரியத்தை நோக்கும்போது தாய் நமது இலக்கிய பாரம்பரியத்திலும் முக்கிய இடம் பெறுவது இயல்பே. தொகைப்பாட்டு எனப்பாரம்பரியமாகக் கூறப்படும் சங்க இலக்கியங்களினூடே தொழிற்படும் அகம், புறம் எனும் கோட்பாடு பாடல்களின் தெரிவை மாத்திரமல்லாமல் பாடற்பொருளின் அமைதியையும் தீர்மானித்துள்ளது. அகம் புறம் என்ற விடயப் பொருள் வரையறை காரணமாக இடம்பெறும் பாடல்களில் வரும் பாத்திரங்களின் வகிபாகம் அந்தந்த பொருளுக்கேற்ப ஒரு குறிப்பிட்ட முனைப்புப் பெறுவது தவிர்க்கமுடியாததாகும். தலைவன் தலைவியைத் தவிர்ந்த மற்றைய பாத்திரங்கள் உண்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைப் பாத்திரங்களே. அவை திணை துறைக்கேற்ப தலை மக்களின் செயற்பாட்டிற்கு உதவுவனவாகவேயிருக்கும்.

தாய் அகத்திணையில் ஒரு துணைப்பாத்திரமாகும். அந்தளவிலேயே அவள் பேசப்படுகிறாள். தாயையும் நற்றாய் (பெற்றதாய், செவிலித்தாய்) என இருநிலைப்படுத்திப் பார்ப்பர். தமிழ்ச் சமூக உருவாக்கக் கட்டமைப்பில் முதல் படிநிலைகளில் இளம் பெண்களின் பாலியல் வாழ்க்கையை ஆற்றுப்படுத்துபவளாகச் செவிலி ஒருத்தி தொழிற்பட்டுள்ளமை உய்த்துணரக்கூடிய தாகவுள்ளது. அந்தப்பால்நிலை ஆற்றுப்படுத்தலின் பொழுது இளம் பெண்கள் ஒரு தொகுதியினராக ஒரு செவிலியின் மேற்பார்வை யின்கீழ் வந்திருக்கலாமோ என்ற ஐயத்தை மானிடவியல் ஆய்வுகள் ஏற்படுத்துகின்றன.

களவில் செவிலி முக்கியமாக அதில் நற்றாயின் பங்கு சிறிது குறைவாகவே காணப்படுகிறது. இதனால் கற்புநிலை வாழ்க்கை யிலேயே நற்றாய் முக்கியப்படக்கூடிய வாய்ப்புண்டு.

புறத்திலோ பெரும்பாலும் இவள் வீரனுடையதாகவே பேசப்படுகிறாய். தலைவனுடைய வீரத்திற்கு அவனை அவள் வளர்த்த முறைமையும் ஒரு காரணமென்பது நன்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆனால், இங்கும் தாயின் ஒருபுடைத்தன்மையே முக்கியப்படுத்தப்படுகிறது. தாய்மைக் கண்ணோட்டத்தில் நின்று தாமே தாய்மையை முதன்மைப்படுத்துவதற்கான பொதுவைப்பு முறைமை இவ்விலக்கியங்களில் சற்று குறைவாகும். ஆயினும் தாயின் முக்கியத்துவமானது பல பாடல்களில் நன்கு வெளிப்படுத் தப்படுகின்றது. குடும்பம் பசியால் கஷ்டப்படுகின்றபோது குழந்தை தாய் முகம் நோக்க தாய் (மனைவி) தன்முகம் நோக்கியது பற்றி பெருஞ்சித்தனார் குமணரிடத்துக் கூறும்பொழுது அந்த வறுமையின் சோகத்தினூடேயும் தாய் தன் உயிரைப் பிழிந்து தன் பிள்ளைகளுக்கு பாலூட்டி வளர்ப்பது நன்கு புலனாகின்றது. இளந்தாயர் பற்றிய குறிப்புகளில் பெற்ற நிலையில் தங்கள் மேலாடையில் பால் ஒழுக அவர்கள் நிற்பதாகச் சித்தரிக்கப்படுவதும், காதலி தானும் ஒரு தாயாக மாறுவதிலேற்படும் மாற்றங்கள் நியைக் கூறப்படுகின்றன. அந்த இளம்பெண் தன் அழகிலும் பார்க்க தனது தாய்மை நிலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியப்படுத்துவது மிக முக்கியமான ஒரு விடயமாகும்.

ஆரம்பகால இலக்கியங்களில் தாயின் பிரதான பணியாக முனைப்புறுத்தப்படுவது ஈன்று புறந்தருதலாகும். திருவள்ளுவரும் ஈன்றபொழுது பற்றி பேசுகிறார். இதுவொரு முக்கியமான அம்சமாகும். பிற்கால வழக்கிலும் இன்றைய பேச்சு வழக்கிலும் கூட இந்த அம்சம் முனைப்புப் படுத்தப்படுகின்றது. தாயைப் பற்றி பேசும்பொழுது வெறுமனே தாயெனக் கூறாமல் பெற்றதாய் என்று கூறும் மரபு இன்றுவரை காணப்படுகின்றது.

இதுவொரு முக்கியமான குறிப்பு. பிள்ளையைப் பெற்றெ டுப்பதென்பதே அவளின் மிகப் பெரிய பணியாகும். பெறுதல் என்பது நடைபெறுவதற்கான முன் நிலைகள் முக்கியமானவை. கருவுற்று, பத்துமாதம் தன் உடம்பின் ஒரு பகுதியாக வைத்தீரந்த அதன்பின் பெற்றெடுக்கின்றாள். இந்தப் பெற்றெடுப்பை பேறு (குழந்தைப்பேறு) என்பர். மருத்துவ வசதிகள் மிகச் சிறப்பாக வளர்ந்துள்ள இந்தக் காலத்திலேயே பிள்ளையைப் பெறும் அந்தக் கணமானது சாதாரணமான மனிதவிலக்குதல்களுக்கு அப்பாலானது. எதுவும் நடைபெறலாம்.

உண்மையில் பிள்ளையைப் பெறுவதென்பது தாயும் பிள் ளையும் தத்தம் உயிர்நிலைகளைப் பெற்றுக்கொள்வதாயும். இத னாலேயே இன்றும் யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் ஒரு பெண்ணுக்கு பிரசவ வேதனையேற்படுகின்றபோது (இரண்டுயிரும் தெரி)க்க வேண்டும் என்று பிரார்த்திப்பர். இது நெஞ்சை எரிக்கும் உண்மையாகும். பிரசவ வேதனையென்பது தாயின் உயிரும் பிள்ளையின் உயிரும் தெரிநிலைப்படுதலாகும்.

தாயின் பிரசவவேதனையையும் அதனால் அவளுக்கு ஏற்படுகின்ற உடல்நிலை ஆபத்துக்களையும் உள்வாங்கிய ஈன்ற, ஈன்றபொழுது என்ற தொடர்கள் பயன்படுத்தப்பட்டன எனலாம்.

பக்தி இலக்கிய காலத்திற்கு வருகின்றபொழுது பக்தியு ணர்வுக்கு அடிப்படையான மானுட நிலை உளக்கிளர்வுகள் எடுத்துக் கூறப்படுவது தவிர்க்கமுடியாததாகின்றது.

பிதாவழி ஆதிக்கச் சூழலில் வகுத்தெடுக்கப்பட்ட இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா உறவு பற்றிய வகைப்பாட்டில் தகப்பன் தாய் உறவுதான் முக்கியப்படுத்தப்படுகின்றது. அப்படியிருப்பினும் தாயையும் இணைத்தே தேவார முதலிகள் முதல் மாணிக்கவாசகர் வரை பாடியுள்ளனர். இறைவனைத் தாயுமானவனாகக் காணும் பண்பு பிற்காலத்ததே. அதற்கு பின்னர் தாய்மையின் இயல்பு பற்றி மாணிக்கவாசகர் கூறும் ஒரு விடயத்தினை நினைவுகூறல் பொருத்த மானதாகும்.

**பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்துநீ பாவியே னுடைய**
**ஊனினையுருக்கி உள்ளொளிபெருக்கி உவப்பிலா ஆனந்தமாய**
**தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த செல்வமே சிவபெருமானே...**

என மாணிக்கவாசகர் தாயினைப் பாடியுள்ளார். பால்நிலைந்தூட்டும் என்பது வரி. உண்மையில் அழுதபிள்ளைதான் பால் குடிக்குமென்பதல்ல. குறிப்பாக பிறந்தது முதல் ஐந்து, ஆறு மாத நிலையில் தனது குழந்தைக்கு பால் ஊட்டவேண்டுமென்று அவள் நினைத்தே அதைச் செய்வாள். குழந்தைக்கு எப்போது பசிக்குமென்பது குழந்தைக்குத் தெரியாது. தாய்க்குத்தெரியும். அதனாலேதான் நினைந்து ஊட்டுகிறாள். அதுவும் அவள் உண்மையில் பால் கொடுப்பதல்ல, ஊட்டுகிறாள். சிறுகுழந்தைக்குப் பாலூட்டுவதென்பது இளம் தாய்மார்களின் வாழ்வுகளிலே மகோன்மதமான விடயமாகும். அவளூட்டும் பால் அவள் தன் னையுருக்கிக் கொடுப்பது. பால் வேறுபாடு இருக்கக்கூடா தென்பதற்காக அவள்தான் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறாள். இதனாலேயே சேர்க்குவரும் நோய்க்கு தாய் மருந்துண்பதுபோல் என்ற உவமைத்தொடர் உள்ளது. தன்முலைப்பாலை தன்குழந்தைக்கு ஊட்டாவிட்டால் தாயின் உடல்நலமே சிதைவுறும். முலைக்குத்து நீங்க கிருஸ்ணனிற்குப் பால் கொடுக்கும் இன்பம் பற்றி ஆழ்வார்கள் பலர் பாடியுள்ளனர்.

தாயின் மனநிலையை சித்தரிக்கும் இலக்கியப் பாடல்கள் பால உள்ளன. கன்றையுடைய பசு பால் கொடுக்கவேண்டிய நேரத்தில் தனது க்னறைத் தேடியெழுப்பும் குரலின் அதிர்வு ஆத்மாவின் அலறலாகவே பேசப்படுகிறது. உற்றாரையான் வேண்டேன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்வேண்டேன், பேர் வேண்டேன் என்ற பாடலில் வரும் கடைசி இருவரிகளும் இந்த வேண்டுதலை அழியாத ஓவியமாகத் தருகின்றன.

> **குற்றாலத்துறையுறையும் கூத்தாஉன் குறைகளுக்கு**
> **கற்றாலின் மனம்போல கசிந்துருக வேண்டுவனே**

கன்றையுடைய பசுவின் அம்மா என்ற கன்றைத் தேடிய குறள் எவ்வாறு பிறக்கின்றதென்பது இங்கு சுட்டப்படுகிறது. கற்றாவின் மனம்போல கசிந்துருக வேண்டுவனே. தாயின் மனம் கசிந்து உருகும். இங்கு கசிதல் என்னும் சொல்லின் நுண்மையை உணர்ந்து கொள்ளல்வேண்டும். அந்தக் கசிவு மனதையுருக்குகிறது.

உருக்குகிறது எனும் பொழுதே அதுவரை உறைந்து கிடந்த ஒன்று நீரோட்டமாகப் பாயத்தொடங்குகிறது என்பதாகும். இப்படிப்பார்க்கும் பொழுதுதான் மேலே மேற்கோள்காட்டிய மாணிக்கவாசகரின் தாயினும் காலப் பரிந்து என்ற தொடரின் உண்மையான பரிமாணம் துலங்கத் தொடங்குகின்றது.

16ம் 17ம் நூற்றாண்டுகளில் தொடங்குகின்ற தமிழின் 2அவது பக்தியுகத்தில் அம்மன் மிக்க பொலிவுடன் போற்றப்படுகிறாள். இத்தகையதொரு பின்புலத்தினை மனதில் வைத்துக்கொண்டு நோக்கும்பொழுது தான் கத்தோலிக்கத்தமிழ் பாரம்பரியத்திலே மரியேமாதா வேண்டப்படுவதும், போற்றப்படுவதும் பூரண துலக்கமுறும். தங்களுடைய வழிபாடு ஆன்ம விமோசனத்திற்கான வேண்டுதலை மேரிமாதா இறைவனிடத்திற் செய்கின்றாள் எனும் மனநிலை உருக்கமானதாகும்.

அடுத்து குடும்ப நிலையில் தாயின் வகிபாகம் பற்றி நோக்குவோம். குடும்பமெனும் சொல் குடி எனும் சொல்லின் அடியாக வருவது. இணைந்து ஒரு கூரையின் கீழ் வாழ்தல் என்பதனை இதன் உள்ளார்த்தமாகக் கொள்ளலாம். அப்படியான வாழ்விருப்பின் இடத்தை மனை என்று கூறுவது தமிழ் மரபு. உண்மையில் மனை என்பதே Home என்பதற்கான தமிழ்ப்பதமாகும். மனைக்கு உரியவள் மனைவியாகிறாள். (மனை இ ஐ யும் இ யும் புணரும்பொழுது வகரம் தோன்றிற்று) மனைவி) கணவனிலும் பார்க்க மனைவியே மனையின் தொடர்ச்சிக்கு மையப்புள்ளியாக்கப்படுகிறாய். மனைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்காகிய வாணுதல் எனும் வரிவருகிறது. இவளுக்குப் பிறக்கும் குழந்தைகளே குலவிளக்குகளாகும். வள்ளுவரும் மனைமாட்சி என்றே கூறுவதை நோக்கல் வேண்டும்.

பெண்மையில் தொடங்கும் தாய்மை தெய்வத்தன்மையாகப் பொலிவு பெறுகின்றது. தாயெனும்படிமம் மொழிக்கும் நாட்டுக்கும் விஸ்தரிக்கப்படும்பொழுது மொழியும் நாடும் மாத்திரமல்ல, தாய்மைக்கு மதிப்புக் கொடுக்கும் நமது பண்பாடும் சிறப்புறுகிறது.

தாயின் பிரசன்னம் பகல் நேரத்துச் சூரிய வெளிச்சம் போன்றது. அதனை யாரும் விதந்து கூறுவதில்லை. பகல் என்றால் வெளிச்சமிருக்குமென்பது விவாதிக்கப்படவேண்டாதவொன்று. சூரிய வெளிச்சம் இல்லையென்றால் பகல் தன்நிலையை இழக்கின்றது. தாய் பற்றிய நிலையும் அத்தகையதே. தாய் இல்லையெனும் பொழுதுதான் உண்மையில் தாய்நிலை நின்று பிள்ளையைப் பார்த்த நாம் அடுத்து பிள்ளைநிலை நின்று தாயைப் பார்ப்பதும் அவசியமாகும்.

தாயன்பு பற்றித் தெரியாத குழந்தைகள், இளவயதினரின் ஆளுமைகளில் பாரிய பாதிப்பு ஏற்பட்டுவிடுகின்றது. பிள்ளை மற்றவர்களுடன் இயைந்து செல்வதும் மற்றவர்களை மனம் நோகாது வைத்திருக்க முயல்வதும்கூட அக்குழந்தை தாயைத் திருப்படுத்தச் செய்வதுதான். தன்னுடைய இன்முகம் தாயினுடைய அளவு கடந்த சந்தோசத்துக்கு காரணமாகின்றதென்பதை பிள்ளை உணர்ந்து கொள்ளும்போது அதன் சமூகமயவாக்கம் சிக்கலற்றதாக அமைந்து விடுகிறது. தாயன்புக்குப் பழக்கப்படாத பிள்ளை ஒரு மனிதக் குறைபாட்டுடனேயே வளர்கிறது. தாய்நிலையில் ஒரு முக்கிய அம்சம் யாதெனில் ஒரு குழந்தையினால் அம்மா என்று அழைக்கப்படுகின்றபொழுது அவள் தன் பெண்நிலைக் குறைபாடுகளைக் கடந்து சென்று விடுகிறாள். பெண் என்ற நிலையில் தவறுகளுக்கு ஆட்படுத்தப்படலாம். ஆனால், தாய் தவறுகளுக்கு அப்பாலானவள். தாயின் இழப்பு அது எத்தனை வயதில் நடைபெற்றாலும் ஆழமான உளத்தாக்கத்தை ஏற்படுத்துவதாகும். தகப்பன்மார் கூட பிள்ளைகளுடன் சிறிதளவே அளவளாவுகின்ற ஒரு பண்பாட்டுக் கூற்றுக்குப் பழக்கப்பட்டுப்போன நாம் தாயின் மறைவுடன் நம்மை இடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும் ஒருவரை இழந்து விடுகிறோம். தில்லிக்கு ராஜா என்றாலும் தல்லிக்குப் பிள்ளை தல்லி என்பது கன்னடத்தில் தாயைக் குறிக்கும் அந்தத் தாயினுடைய தலையீட்டை இழத்லென்பது தாளாத சோகமாகும். உண்மையில் நம்மிற் பலர் நமது ஆளுமைகளின் தனிமையை அப்போதே உணர்ந்தோம். தாய் என்பது எந்த மொழியிலென்றாலும் பவித்திரமான அதேவேளையில் அற்புதங்கள் நிறைந்த ஒரு சொல்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி
(மூலம் – நிகரில்லா நேசம்)

## சர்வதேச குறியீடுகள்

| | | |
|---|---|---|
| சமாதானம் | – | புறா, ஒலிவ் மரத்தின் இலை, வெள்ளைக்கொடி |
| துன்பம் | – | தலைகீழாக கொடி |
| இரங்கல் | – | அரைக்கம்பத்தில் கொடி |
| சிவப்பு விளக்கு | – | ஆபத்து, நிறுத்து, மருத்துவமனை |
| செஞ்சிலுவை | – | மருத்துவமனை, செஞ்சிலுவைச் சங்கம் |
| எதிர்ப்பு | – | கறுப்புக் கொடி |
| ஆபத்து | – | எலும்பு நடுவில் மண்டையோடு |
| தொற்றுநோய் | – | மஞ்சல் கொடி |
| பண்பாடு, நாகரிகம் | – | மேல்நோக்கி செங்குத்தாக கொடி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் கால நிறைவும்
## அது அழைக்கப்படும் விதமும்

| | | |
|---|---|---|
| ஒரு வருடம் | – | காகிதவிழா |
| இரு வருடம் | – | பருத்திவிழா |
| மூன்று வருடம் | – | தோல்விழா |
| நான்கு வருடம் | – | பூ விழா |
| ஐந்து வருடம் | – | மர விழா |
| ஆறு வருடம் | – | கற்கண்டு விழா |
| ஏழு வருடம் | – | செம்பு விழா |
| எட்டு வருடம் | – | வெண்கல விழா |
| ஒன்பது வருடம் | – | மணிக்கலச விழா |
| பத்து வருடம் | – | தகர விழா |
| 11 வருடம் | – | எஃகு விழா |
| 12 வருடம் | – | வினன் விழா |
| 13 வருடம் | – | லேஸ் விழா |
| 14 வருடம் | – | தந்த விழா |
| 15 வருடம் | – | படிக விழா |
| 25 வருடம் | – | வெள்ளி விழா |
| 30 வருடம் | – | முத்து விழா |
| 40 வருடம் | – | மாணிக்க விழா |
| 50 வருடம் | – | பொன் விழா |
| 60 வருடம் | – | மணி விழா |
| 75 வருடம் | – | பவள விழா |
| 80 வருடம் | – | அமுத விழா |
| 100 வருடம் | – | செஞ்சுரி விழா |
| 1000 வருடம் | – | மில்லேனியம் விழா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரும் தெரிந்துகொள்ளவேண்டிய பொது விஞ்ஞானம்

1. மனித உடலில் எந்தப் பாகம் முதலில் இறக்கின்றது?
   மூளையின் கலங்கள்

2. இதயத் துடிப்பைத் தூண்டும் இதயத்தின் மையம் எது?
   பேஸ்மேகர்

3. ஓடும்போது ஏன் இதயம் வேகமாக வேலை செய்கிறது?
   அ. கலங்களுக்கு மேலதிகமாக உணவளித்தல் அவசியமாகும்
   ஆ.கலங்களில் இருந்து மேலதிக கழிவுப் பொருட்கள் வெளியேற்றப்படுகிறது.
   இ. மேற்கண்ட இரு காரணங்களும் நடப்பதுதான் இதயம் வேகமாக வேலை செய்யக் காரணமாகிறது.

4. சாதாரண மனிதன் ஒரு நிமிடத்திற்கு எத்தனை முறை கண்ணை மூடித் திறக்கிறான்?
   25 தடவைகள்

5. சீனியில் உள்ள கனிப்பொருள்கள் எவை?
   காபன், ஒட்சிசன், ஐதரசன்

6. மின்குமிழில் எவ்வாறு ஒளி உண்டாகிறது?
   மின்சாரத்தில் வெப்ப சக்தி ஒளியாக மாறுவதால்தான் மின்குமிழ் ஒளிர்கிறது.

7. மின்குமிழினுள் உள்ளே செலுத்தப்பட்ட வாயு எது?
   ஆகன், நியோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. மனித மூளையின் அளவு என்ன?

8 அங்குல நீளம், 6 அங்குல அகலம், 4 அங்குல தடிப்பு

9. பசி என்றால் என்ன?

இரப்பையினுள் சென்ற உணவு, உணவு சமிபாடு அடைந்ததும் சுருங்கும். உணவு சென்றதும் விரிவடையும். சுருங்கும் போது பசி உணர்வு ஏற்படுகிறது.

10. விசர்நாய் கடித்தால் போடும் ஊசி எது?

ARB எனப்படுகின்றது.

11. குளிர்சாதனப் பெட்டியினுள் இருக்கும் வாயு எது?

அமோனியம்

12. செந்நிறமான தவிட்டு அரிசியிலுள்ள விட்டமின் எது?

விட்டமின் B

13. உடலில் மிகச் சிறிய எலும்பு எது?

காதில் உள்ள எலும்பு

14. ஒரு நிமிடத்தில் ஒரு மனிதனின் இதயம் எத்தனை போத்தல் குருதியை உடலினுள் செலுத்துகிறது.?

7.5 போத்தல்

15. இரண்டாம் உலகப் போரின்போது கூடுதலாகப் பயன்படுத்தப்பட்ட விஷ வாயு எது?

அமோனியம் வாயு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையின் பரிமாணம்

வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம்

அதை நழுவ விடாதீர்கள்

வாழ்க்கை ஒரு பயணம்

அதைச் சென்று முடியுங்கள்

வாழ்க்கை ஒரு விடுகதை

அதை விடுவியுங்கள்

வாழ்க்கை ஒரு விளையாட்டு

அதனை வென்று காட்டுங்கள்.

வாழ்க்கை ஒரு வெகுமதி

அதனை ஏற்று மகிழுங்கள்.

வாழ்க்கை ஒரு போட்டி

அதில் மோதிப் பாருங்கள்

வாழ்க்கை ஒரு கலை

அதை மேன்மைப்படுத்துங்கள்

வாழ்க்கை ஒரு வேதனை

அதைத் தாங்கிச் சிரியுங்கள்

வாழ்க்கை ஒரு சவால்

அதை எதிர்கொள்ளுங்கள்

வாழ்க்கை ஒரு சோகம்

அதை ரசித்துக் கடவுங்கள்

வாழ்க்கை ஒரு பிரச்சினை

நல்ல தீர்வு கண்டு மேன்மை அடையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி பற்றி சுவாமி விவேகானந்தர்

- மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும்

- எத்தகைய பயிற்சியின் மூலம் மனஉறுதியின் வேகமும் அதன் வெளிப்பாடும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, பயன்தரும் வகையில் அமைகின்றதோ, அந்தப் பயிற்சிதான் கல்வியாகும்.

- மனதை ஒரு முகப்படுத்துவதுதான் என்னைப் பொறுத்த வரையில் கல்வியின் அடிப்படையான லட்சியம் ஆகும்.

- எத்தகை கல்வி தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைத் தனது சொந்தக்காலில் நிற்கும்படி செய்கிறதோ, அதுதான் உண்மையான கல்வியாகும்.

**************************************************

இக்காயம் நீக்கி இனி ஒரு காயத்திற்
புக்குப் பிறவாமல் போம் வழி நாடுமின்
எக்காலத்தில் உடல் வந்து எமக்கு ஆனதென்று
அக்காலம் முன்னே அருள் பெறலாமே.

- திருமூலர் திருமந்திரம் -

காலன் பருமுன்னே கண்பஞ்சடை முன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே – மேல் விழுந்தே
உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானேயே கூறு.

- பட்டினத்தடிகள் பாடல் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுருக்கப் பதங்கள்

ஆங்கில எழுத்துக்களின் முதல் எழுத்துக்களை மட்டும் கொண்டு உருவாக்கப்பட்ட சுருக்கப்பதங்கள் பற்றிய விடயங்கள் கீழே உள்ளடக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| NATO | வட அத்திலாந்திக் ஒப்பந்த நிறுவனம் |
| ADB | ஆசிய அபிவிருத்தி வங்கி |
| WTo | உலக வர்த்தக நிலையம் |
| ILO | சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் |
| UNO | ஐக்கிய நாடுகள் சபை |
| UNICEF | ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் |
| UNHCR | ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் |
| WHO | உலக சுகாதார ஸ்தாபனம் |
| EEC | ஐரோப்பிய பொருளாதார சமூகம் |
| OPEC | பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமையம் |
| NASA | தேசிய விண்வெளி ஆய்வு நிலையம் |
| BBC | பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் |
| USA | ஐக்கிய அமெரிக்க அரசு |
| PLO | பலஸ்தீன விடுதலை இயக்கம் |
| ACEAN | தென்கிழக்காசிய நாடுகளின் நிறுவனம் |
| ITU | சர்வதேச தந்தி நிறுவனம் |
| BRD | புனரமைப்பிற்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச நிறுவனம் |
| IMF | சர்வதேச நாணய நிதியம் |
| IMBA | சர்வதேச அணுசக்தி நிலையம் |
| ANC | ஆபிரிக்க தேசிய இயக்கம் |
| WIPO | உலக புத்தி ஜீவிகள் அமைப்பு |
| WIPO | ஐக்கிய அமெரிக்காவின் உலக இரகசிய பொலிஸ் |
| CIV | ஐக்கிய அமெரிக்காவின் மத்திய உளவு அறியும் நிறுவனம் |
| UPU | உலக தபால் சங்க ஸ்தாபனம் |
| SCM | ஐரோப்பிய பொதுச்சந்தை |
| UNEFA | ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் |
| FAC | உலக உணவு விவசாய ஸ்தாபனம் |
| OAU | ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் |
| UNU | உலக பல்கலைக்கழக ஸ்தாபனம் |
| WCC | உலக திருச்சபைகள் அமையம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு விடயங்கள்

1) உலகின் முதல் தானியங்கிக் கணினி 1994ஆம் ஆண்டு பிடிக்கப்பட்டது. அதன் பெயர் என்ன?
மார்க் 1

2) உலகின் முதல் இலத்திரனியல் கணினி 1945 ஆம் ஆண்டு தான் கணினி விற்பனைக்கு வந்தது. அக் கணினியின் பெயர் என்ன?
எனியாக்

3) உலகின் முதன் முதலாக 1951 ஆண்டு தான் கணினி விற்பனைக்கு வந்தது. அக்கணினியின் பெயர் என்ன?
யுனிவேக்

4) இணையத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
வினிட் செர்ப்

5) புகழ்பெற்ற சி கணினி மொழியை உருவாக்கியவர் யார்?
டென்னஸ் ரிச்சி

6) முதன் முதலில் 1957 ஆம் ஆண்டு கணினி உயர்நிலை மொழி உருவாக்கியது. அதனைச் சுருக்கமாக எப்படி அழைப்பர்?
போட்ரன்

7) உலகின் முதன் முதலில் 1950 ஆம் ஆண்டு கணினி இதழ் வெளிவந்தது. அந்த இதழின் பெயர் என்ன?
கொம்பியூட்டர்ஸ் அண்ட் ஒட்டோ மேஷன்.

8) கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் 1949 ஆம் ஆண்டு முதலாவது கணினியை உருவாக்கியது. அதன் பெயர் என்ன?
எட்சாக்

9) கணினியின் தோற்றத்திற்கு வித்திட்டவர்கள் யார்?
சீனர்கள்

10) கணினித்துறையில் புகழ்பெற்ற புகழ்பெற்ற இன்டெல் நிறுவனத்தின் தலைவர் காட்டன் மூர் என்பவர் உருவாக்கிய விதியின் பெயர் என்ன?
மூர் விதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) துப்பறியும் நாவல்களின் தந்தை என அழைக்கப்படும் அமெரிக்க எழுத்தாளர் யார்?
எட்கார் அலன்போ

12) ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?
நியூயோர்க்

13) உலகின் முதலாவது சோதனைக் குழாய்க் குழந்தையின் பெயர் என்ன?
லூயிஸ் பிரவுன்

14) ஐக்கிய நாடுகள் கலை கல்வி விஞ்ஞான கலாசார நிறுவனத்தின் (யுனஸ்கோ) தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?
பாரிஸ்

15) அமெரிக்கா விண்ணில் ஏவிய முதலாவது செயற்கைக்கோள் எது?
ஸ்புட்னிக் - 1

16) இசைத்தட்டைக் கண்டு பிடித்த அமெரிக்கரின் பெயர் என்ன?
டொக்ரர் பீற்றர் கோல்ட்

17) இரவில் நல்ல உறக்கம் வர என்ன நிற மின்குமிழ் பயன்படுத்த வேண்டுமெனக் கூறப்படுகின்றது?
ஊதா

18) " த இன் சைடர் " என்ற நாவலை எழுதியவர் யார்?
பி.வி நரசிம்ம ராவ்

19) கூலிக்குப் படம் பிடிக்கும் படப்பிடிப்பாளர் களை எப்படி அழைப்பர்?
பப்பராசிகள்

20) கண் பார்வையற்றவர்களுக்கான முதலாவது சர்வதேச கிரிக்கெட் போட்டி எந்த நாட்டில் நடைபெற்றது?
இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21) கிரிக்கெட் உலகின் "பிதாமகர்" என்று அழைக்கப்படுபவர் யார்?
டொனால்ட் பிரட்மன்

22) "பொல் பொட்" எந்த இயக்கத்தின் தலைவராக இருந்தார்?
கெமருச்

23) இஸ்ரேல் நாட்டின் உளவு நிறுவனத்தின் பெயர் என்ன?
மொசாட்

24) இரண்டு உலகப் போர்களிலும் சம்பந்தப்படாத நாடு எது?
சுவிட்சர்லாந்து

25) எழுத்தாளர் சல்மான் ருஷ்டிக்கு மரண தண்டனை விதித்தவர் யார்?
அயதுல்லா கொமேனி

26) உலகிலேயே முதன் முதலில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய நாடு எது?
நியூசிலாந்து

27) அரசாங்கத் தங்கக் கையிருப்பில் உலகிலேயே அதிக தங்கத்தை வைத்திருக்கும் நாடு எது?
அமெரிக்கா

28) பதின்மூன்றாவது ஆசிய விளையாட்டுப் போட்டிச் சின்னத்தின் பெயர் என்ன?
சாய் - யோ

29) பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவரின் பெயர் என்ன?
யாசிர் அரபாத்

30) புகழ்பெற்ற ஓவியர் "பாப்லோ பிக்காசோ" எந்த நாட்டில் பிறந்தார்?
ஸ்பெயின்

31) இடக்கையால் விளையாடத் தடையுள்ள விளையாட்டு எது?
போலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32) பாடசாலைகளில் பாடம் நடத்துவதற்காக 'குளோப்' என்னும் உலக உருண்டையை உருவாக்கியவர் யார்?
றிச்சர்ட் ஹக்குல்பட்

33) உலகின் முதல் 'எயிட்ஸ்' நோயாளி 1981 ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டார். அந்த நோயாளி எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
அமெரிக்கா

34) மரபியலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
கிரிகர் மெண்டில்

35) சர்வதேச குற்றவாளிகளைப் பிடிக்க உதவும் பன்னாட்டுப் பொலீஸ் அமைப்பை எப்படி அழைப்பர்?
இண்டர்போல்

36) 'குளோனிங்' என்ற முறையை கண்டுபிடித்தவர் யார்?
இயான் வில்மட்

37) உலக சுகாதார நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அமைந்திருக்கும் இடம் எது?
ஜெனிவா

38) உலகின் முதன் முதலில் செயற்கைக் கண்ணை உருவாக்கி சாதனை படைத்தவர் யார்?
டோபிளி

39) ஒலிம்பிக் கால்பந்தாட்ட போட்டிகளுக்காக (ஆசிரியாவிலிருந்து) நடுவராகத் தெரிவுசெய்யப்பட்ட முதல் இந்தியப் பெண் மணி யார்?
பெண்டலா டீகாத்

40) உலகின் முதல் அணுகுண்டை வடிவமைத்த பௌதீகவியலாளரின் பெயர் என்ன?
என்ரிகோ ஃபெர்மி

41) வீட்டுக் காவலுக்காக புதுவகையான "ரோபோ நாயை" முதன் முதலில் உருவாக்கிய நாடு எது?
பிரேசில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42) ரொனால்டோ, ரொமாரியோ ஆகிய இருவரும் எந்த விளை யாட்டு மூலம் உலகப் புகழ் பெற்றார்கள்?
கால்பந்தாட்டம்

43) இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கா போட்ட அணு குண்டை வடிவமைத்த அணுவிய லாளரின் பெயர் என்ன?
ஜெ.ரொபட் ஓபன் ஹெய்மர்

44) மனிதர்களைப் போன்று இசையை ரசிக்கும் கடல்வாழ் உயிரினம் எது?
டொல்பின்

45) இந்தோனேஷியா நாடு எத்தனை தீவுகளை உள்ளடக்கிய தென் கிழக்கு ஆசிய நாடாகும்?
ஆறாயிரம்.

46) போர்வீரர்கள் சரணடையும் போது (எதிரிகள்) எந்த நிறக் கொடியை உயர்த்திப் பிடிப்பர்?
வெள்ளை

47) அமெரிக்க ஜனாதிபதியாக வருவதற்கு முன் மொடலிங் தொழி லில் (ஆண் மொடலிங்) ஈடுபட்டிருந்தவர் யார்?
ஜெரால்ட் ஃ போர்ட்

48) முஸ்லிம் நாடு ஒன்றில் பிரதமராகப் பதவி ஏற்ற முதல் பெண்மணி யார்?
பெனாசிர் பூட்டோ

49) இங்கிலாந்தில் பிரதமராக பதி வகித்தவர்களில் கிட்டார் இசைக்கத் தெரிந்த பிரதமத் யார்?
டோனி பிளேயர்.

50) இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்று கூறி அதை அங்கீகரித்த பிரிட்டிஷ் பிரதமர் யார்?
பெஞ்சமின் டிஸ்ரேலி.

51) முதன்முதலாக எட்டு மணிநேர வேலைத் திட்டம் எந்த நாட்டின் அறிமுகப்படுத்தப்பட்டது?
அமெரிக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52) 'அமைதிக்கடல்' என்று எந்தக் கடலை வர்ணிக்கிறார்கள்?
பசுபிக் கடல்

53) ஒஸ்கார் விருதை ஒரு பொம்மை பெற்றிருக்கின்றது. அப் பொம் மையின் பெயர் என்ன?
மிக்கி மவுஸ்

54) அரபு நாடுகளில் மிகவும் புகழ்பெற்ற தொலைக்காட்சி சேவை எது?
அல் - ஜஸீரா தொலைக்காட்சி

55) செயற்கைத் துணைக்கோளின் உதவியுடன் கண்டுபிடிக்கப்பட்ட மறைந்த புராண நதி எது?
சரஸ்வதி நதி

56) நவீன பொருளாதாரத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
அடம் சிமித்

57) மனிதனுக்கு அடுத்தபடியாக அறிவுத்திறன் மிக்க விலங்கு எது?
சிம்பன்ஸி

58) 'யுரேன்ஸ்' கிரகத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
வில்லியம் ஹெர்வுஸ்

59) 'நெப்டியூன்' கிரகத்தைக் கண்டு பிடித்த விஞ்ஞானி யார்?
ஜோஹன் காலே

60) 'புளூட்டோ' கிரகத்தைக் கண்டு பிடித்த விஞ்ஞானி யார்?
களைட் டாம்பக்

61) மருத்துவத்துறையில் முதன் முதலில் கம்பி யூட்டர் மூலம் முப்பரிமாணப்படம் தயாரித்தவர் யார்?
ஹென்ஸ் பீல்ட்

62) உடைக்கப்பட்ட பெர்லின் சுவர் எத்தனை கிலோ மீற்றர் நீள முடையது?
49 கிலோ மீற்றர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63) அமெரிக்காவின் முதலாவது விண்வெளி வீராங்கனை என்ற சிறப்பிற்குரியவர்கள்?
சாலி ஏ ரைட்

64) உலகின் முதலாவது விண்வெளித் தம்பதியர் எந்த நாட்டவர்?
ரஷ்யா

65) ரஷ்யாவின் முதலாவது விண்வெளி வீராங்கனை என்ற சிறப்புக்குரியவர் யார்?
வலன்டினா. வி.தெரஸ்கோவா

66) அமெரிக்கத் தேசியக் கொடியில் உள்ள நட்சத்திரங்கள் எத்தனை? கோடுகள் எத்தனை?
ஐம்பது, 13

67) தாதிகளுக்காக முதன் முதலில் பயிற்சிப் பாடசாலை எந்த நாட்டில் தோன்றியது?
ஜேர்மனி

68) குடிநீரைச் சுத்தப்படுத்தப் பயன்படும் வாயுவின் பெயர் என்ன?
குளோரின்

69) இரத்த ஓட்டத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
வில்லியம் ஹாரார்வி

70) மதுப் பழக்கத்தினால் முதலில் பாதிக்கப்படுவது எது?
கல்லீரல்

71) அமெரிக்க விண்கலத்தில் பயணம் செய்த முதல் பெண் விமானியின் பெயர் என்ன?
எலின் கோலின்ஸ்

72) செயற்கைக் கண்களை அதிகம் தயாரிக்கும் நாடு எது?
ரஷ்யா

73) பசுமைப் புரட்சியின் தாயகம் எது?
மெக்ஸிகோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74) சமாதானத்தின் சின்னமான வெண்புறாவை அமைத்துக் கொடுத்தவர் யார்?
பாப்லோ பிக்காஸோ

75) மூக்குக் கண்ணாடி எந்த நாட்டினரால் கண்டுபிடிக்கப்பட்டது?
சீனா.

76) முதன் முதலில் (1998) தனது நாட்டுப் பாராளுமன்றத்தில் தமிழர்களின் திருநாளான தீபாவளித் திருநாளைக் கொண்டாடிய நாடு எது?
கனடா

77) பத்திரிகைகளில் தொடர்கதை எழுதிய முதல் எழுத்தாளர் யார்?
சார்லஸ் டிக்கன்ஸ்.

78) பத்திரிகையில் வெளிவந்த முதல் தொடர்கதை யின் பெயர் என்ன?
டேவிட் காப்பர் ஃ பீல்ட்

79) உலக வானிலை ஆராய்ச்சி நிலையத்தின் தலை மையகம் எங்குள்ளது?
ஜெனீவா

80) ஆரம்ப காலங்களில் பட்டங்கள் எதற்காகப் பயன்படுத்தப் பட்டன?
இராணுவ உபயோகத்திற்கு

81) கடல் அலையில் மின்சாரம் தயாரிக்கும் நாடு எது?
பிரான்ஸ்

82) இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஒருவரே மனித உரிமைக்கழகம் தோன்றக் காரணமாக இருந்தார். அவரின் பெயர் என்ன?
பீட்டர் பெரன்சன்

83) வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் நடித்த படம் எது?
வால்மீகி பிரதிமா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84) ஜேர்மன் நாட்டின் தேசியப் பறவை எது?
வெள்ளைக் கொக்கு

85) கியூபா நாட்டின் முதல் விண்வெளி வீரரின் பெயர் என்ன?
அர்னால்டோ மெஸ்டெஸ்

86) விண்வெளியில் முதன்முதலில் நடந்த விண்வெளி வீரர் யார்?
அலெக்ஸி.ஏ.லோனோய்

87) சந்திரனில் இரண்டாவதாக காலடி வைத்த விண்வெளி வீரர் யார்?
எட்வின் ஒல்ட்ரின்

88) மெக்சிகோ நாட்டின் முதல் விண்வெளி வீரரின் பெயர் என்ன?
நெரி வேலா

89) விண்வெளிப் பயனத்தின்போது இறந்த முதல் விண்வெளி வீரர் யார்?
கோல் கோமராவ்

90) போலந்து நாட்டின் முதல் விண்வெளிவீரர் என்ற பெருமைக்குரியவர்?
மீரோஸ்ராவ் ஹெர்மாஸ்விஸ்கி

91) இஸ்ரேல் நாட்டின் முதல் விண்வெளி வீரரின் பெயர் என்ன?
நெரி வேலா

92) முதன் முதலில் கணினிக்கு புரோக்கிராம் எழுதியவர் யார்?
லேடி அடா லவலேஸ்

93) ஒரு பைட் என்பது எத்தனை பிட்ஸ்களைக் கொண்டது?
எட்டு

94) உலகின் முதல் கணக்கு இயந்திரம் எது?
அபாக்கஸ்

95) கணினியின் தோற்றத்துக்கு வித்திட்டவர்கள் யார்?
சீனர்கள்

96) திருக்குறளை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்?
என்.இ.கிண்டர்ஸ்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97) அமெரிக்கா நாட்டின் தேசியப் பறவை எது?
கழுகு

98) இங்கிலாந்து நாட்டின் தேசியப் பறவை எது?
ரொபின்

99) இந்தியாவின் தேசிய மலர் எது?
தாமரை

100) இந்தியாவின் தேசியப் பறவை எது?
மயில்

101) அமெரிக்காவின் தேசிய விளையாட்டு எது?
பேஸ்போல்

102) அவுஸ்திரேலியாவின் தேசிய விளையாட்டு எது?
கிரிக்கெட்

103) கனடாவின் தேசிய விளையாட்டு எது?
ஐஸ் ஹொக்கி

104) ரஷ்யாவின் தேசிய விலங்கு எது?
கரடி

105) சீனாவின் தேசிய விலங்கு எது?
பண்டா கரடி

106) ருமேனியா நாட்டின் தேசிய மலர் எது?
பூவரம் பூ

107) இந்தியாவின் தெசிய விளையாட்டு எது?
ஹொக்கி

108) ஸ்பெயின் நாட்டின் தேசிய விளையாட்டு எது?
காளைச் சண்டை

109) ஜப்பான் நாட்டின் தேசிய விளையாட்டு எது?
ஜூஜிட்ஜூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

110) 'வெள்ளை யானை நாடு' என அழைக்கப்படும் நாடு எது?
தாய்லாந்து

111) இலங்கையின் தேசியப் பறவை எது?
காட்டுக்கோழி

112) இலங்கையின் மிக நீளமான நதி எது?
மகாவலிகங்கை

113) இலங்கையில் உள்ள மிகப்பெரிய தாவரவியற் பூங்கா எங்குள்ளது?
பேராதனை

114) தேயிலை ஆராய்ச்சி நிலையம் எங்கு அமைந்துள்ளது?
தலவாக்கலை

115) இலங்கையின் முதன் முதலில் உருவாக்கப்பட்ட கிராம எழுச்சி திட்டம் எது?
கம்முதாவ

116) இலங்கையின் முதலாவது புகைவண்டி எவ்விடங்களுக் கிடையில் ஓடவிடப்பட்டது?
கொழும்பு - அம்பேபுச

117) இலங்கையில் முதலாவது பிராந்திய வானொலி நிலையம் எங்கு அமைந்துள்ளது?
அனுராதபுரம்

118) இலங்கையின் முதலாவது வானொலி நிலைய சேவையை எப்படி அழைத்தார்கள்?
ரஜரட்ட சேவை

119) தமிழ் மொழியில் முதன் முதலில் ஒலிபரப்பு சேவையை வழங்கிய தனியார் வானொலி நிலையம் எது?
எவ்.எம்.99

120) இலங்கையில் முதலாவது சிங்கள செய்தித்தா ளின் பெயர் என்ன?
லங்காலோக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

121) இலங்கையின் முதலாவது ஆங்கில செய்தித்தாளின் பெயர் என்ன?
த கொழும்பு ஜேணல்

122) இலங்கையின் சுதந்திரத்தின் பின் முதன் முதலில் ஆரம்பிக் கப்பட்ட நீர் மின்வலு நிலையம் எது?
லக்சபானா

123) இலங்கையின் முதலாவது எண்ணை சுத்திகரிப்பு நிலையம் எங்குள்ளது?
சபுகஸ்கந்த

124) மக்கள் வங்கியில் வெளியிடப்படும் சஞ்சிகை யின் பெயர் என்ன?
பொருளியல் நோக்கு

125) இலங்கையை மமதப்ரபேன்டுடு என்று தனது தேசப்படத்தில் குறித்தவர் யார்?
தொலமி

126) லக்சபான நீர்மின் நிலையம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது?
1950

127) ஐக்கிய தேசியக் கட்சி எத்தனையாம் ஆண்டு உருவாக்கப் பட்டது?
1947

128) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எத்தனையாம் ஆண்டு உருவாக் கப்பட்டது?
1951

129) இலங்கை எத்தனையாம் ஆண்டு குடியரசாகியது?
1972 மே 22

130) இலங்கையும் இந்தியாவும் செய்துகொண்ட சிறிமா -சாஸ்திரி ஒப்பந்தம் எத்தனையாம் ஆண்டு செய்து கொள்ளப்பட்டது?
1964



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

131) இந்தியப் படை அமைதிகாக்கும் படை என்ற பெயரில் எத்தனையாம் ஆண்டு இலங்கைக்குள் காலடி வைத்தது?
1987

132) சனசக்தி நிழ்ச்சித் திட்டம் என்ற பெயரில் வறுமை ஒழிப்புத் திட்டம் எத்தனையாம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
1989

133) இலங்கை துறைமுக அதிகாரசபை எத்தனையாம் ஆண்டு உருவாக்கப்பட்டது?
1979

134) இலங்கையில் அஞ்சல் குறியீட்டு எண்கள் எத்தனையாம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டன?
1996

135) இலங்கை வர்த்தகப் புடவைகள் கூட்டுத்தா பனம் (சலுசல) எத்தனையாம் ஆண்டு நிறுவப் பட்டது?
1967

136) இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் எத்தனையாம் ஆண்டு நிறுவப்பட்டது?
1971

137) இலங்கை மத்திய வங்கி குண்டு வெடிப்புச் சம்பவம் எத்தனை யாம் ஆண்டு நிகழ்ந்தது?
1996

138) இலங்கையில் முதலாவது தபால் முத்திரை எப்போது வெளியிடப்பட்டது?
1857 ஏப்பிரல் 13

139) இலங்கையில் முதலாவது தொலைக்காட்சி சேவை ஆரம்பிக் கப்பட்ட ஆண்டு எது?
1981



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

140) இலங்கையில் தீயணைக்கும் படைப்பிரிவு எத்தனையாம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது?
1892

141) இலங்கையில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட இரட்டைத் தட்டு பேருந்து முதன்முதலில் எத்தனையாம் ஆண்டு கொண்டு வரப்பட்டது?
1946

142) இரண்டாவது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி (1979) எந்த நாட்டில் நடைபெற்றது?
இங்கிலாந்து

143) ஐந்தாவது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணி எது?
பாகிஸ்தான்

144) ஆறாவது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் புதிதாக இணைந்த கிரிக்கெட் அணிகள் எத்தனை?
மூன்று

145) முதலாவது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி எத்தனை ஓவர்களைக் கொண்டது?
அறுபது ஓவர்கள்

146) முதல் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் எப்போது ஆரம்பமாகின?
1971 ஜனவரி 5

147) முதல் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் முதல் பந்து வீசிய பந்து வீச்சாளர் யார்?
கிரகாம் மெக்கன்சி

148) முதல் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி எங்கு நடை பெற்றது?
மெல்போன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

149) முதல் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடைபெற்ற மைதானம் எது?
மெல்போன் மைதானம்

150) முதல் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் முதல் துடுப் பாட்ட வீரர் யார்?
ஜியோப் போங்கொட்

151) முதல் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் முதல் விக் கெட்டைக் கைப்பற்றியவர் யார்?
அலன் தோமஸ்

152) முதலாவது உலகக் கோப்பைக்கான கால்பந்தாட்டப் போட்டி எந்த நாட்டில் நடைபெற்றது?
உருகுவே

153) சர்வதேச கால்பந்தாட்ட போட்டிகள் எத்தனை நிமிடங்கள் நடைபெறுகின்றன?
90 நிமிடங்கள்

154) சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் எத்தனையாம் ஆண்டு உருவாக்கப்பட்டது?
1904

155) உலகக் கோப்பைக்கான கால்பந்தாட்டப் போட்டி எத்தனை வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுகின்றது?
நான்கு

156) முதலாவது ஆசிய விளையாட்டுப் போட்டி எத்தனையாம் ஆண்டு நடைபெற்றது?
1951

157) முதலாவது ஆசிய விளையாட்டுப் போட்டி எங்கு நடை பெற்றது?
இந்தியா புதுடில்லி

158) முதலாவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் எத்தனை வகையான விளையாட்டுக்கள் நடை பெற்றன?
பதினொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

159) முதலாவது நவீன ஒலிம்பிக் போட்டி எத்தனையாம் ஆண்டு நடைபெற்றது?
*1896*

160) முதலாவது நவீன ஒலிம்பிக் போட்டி எத்தனையாம் ஆண்டு நடைபெற்றது?
*1896*

161) இரண்டாவது ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றிய நாடுகள் எத்தனை?
இருபத்தாறு

162) மூன்றாவது ஒலிம்பிக் போட்டிகள் எங்கு நடைபெற்றது?
அமெரிக்கா - செயின்ட்லுயிஸ்

163) உலகிற்கு ஒலிம்பிக் போட்டியை அறிமுகப்படுத் திய நாடு எது?
கிரீஸ்

164) ஒலிம்பிக்கில் இலங்கைக்கு 52 வருடங்களின் பின்னர் இரண்டாவது பதக்கமான வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக்கொடுத்தவர் யார்?
சுசந்திகா ஜெயசிங்க.

165) இரண்டாயிரமாம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டி எங்கு நடைபெற்றது?
அவுஸ்திரேலியா சிட்னி

167) நவீன ஒலிம்பிக் போட்டிகள் உலகப் போர் காரணமாக எத்தனை முறை நடைபெறவில்லை?
மூன்று முறை.

168) இருபத்தோராம் நூற்றாண்டின் முதல் ஒலிம்பிக் போட்டியை நடத்திய பெருமை தந்த நாட்டிற் குரியது?
அவுஸ்திரேலியா

169) முதலாவது உலகக் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியில் எத்தனை நாடுகள் பங்குபற்றின?
எட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

170) இலங்கை மத்திய வங்கி எத்தனையாம் ஆண்டு நிறுவப்பட்டது?
**1950 ஓகஸ்ட் 28**

171) மக்கள் வங்கி எத்தனையாம் ஆண்டு நிறுவப்பட்டது?
**1961**

172) இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் எத்தனையாம் ஆண்டு நிறுவப்பட்டது?
**1961**

173) இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி எத்தனையாம் ஆண்டு நிறுவப்பட்டது?
**1979**

174) இலங்கையின் முதலாவது குடியரசு யாப்பு எத்தனையாம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
**1972**

175) அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி எத்தனை யாம் ஆண்டு உருவாக்கப்பட்டது?
**1949 டிசம்பர் 18**

176) இந்திய வம்சாவழி மக்கள் தொடர்பான சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் எத்தனையாம் ஆண்டு செய்து கொள்ளப்பட்டது?
**1964**

178) இந்திய மக்கள் தொடர்பான சிறிமா - இந்திரா ஒப்பந்தம் எத்தனையாம் ஆண்டு செய்து கொள்ளப்பட்டது?
**1974**

179) அணிசேரா இயக்கத்தின் ஆறாவது மாநாடு எத்தனையாம் ஆண்டு இலங்கையில் நடத்தப்பட்டது?
**1976**

180) நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அரசாங்க முறை எத்தனையாம் ஆண்டு அரசியல் யாப்பின் மூலம் கொண்டுவரப் பட்டது?
**1978**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

181) சிறிலங்கா சுற்றாடல் பத்திரிகையாளர் சங்கம் எத்தனையாம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது?
**1987**

182) இலங்கை அரசியல் வரலாற்றில் முதன் முதலாக ஒரு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு (1947) செய்த பெருமைக் குரிய தொகுதி எது?
பத்தாம் தொகுதி

183) இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் எத்தனையாம் ஆண்டு உருவாக்கப்பட்டது?
1972 ஜனவரி 21

184) தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புக்கான அமைப்பின் (சார்க்) 11வது மாநாடு எங்கு நடைபெற்றது?
காத்மண்ட்

185) சென்னை அப்பலோ மருத்துவமனைக்கு நிகராகச் சேவை செய்யக்கூடிய இலங்கை அப்பலோ மருத்துவமனை எங்கே அமைந்துள்ளது?
நாரஹேன்பிட்டி

186) டொனமூர் யாப்பின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டசபையில் சபா நாயகராகப் பதவி வகித்தவர் யார்?
பிரான்சிஸ் மொலமுறே

187) இலங்கை அரசியல் அமைப்புச் சபையின் முதலாவது செயலாளரின் பெயர் என்ன?
தம்பிக இத்துல்கொட

188) குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களுக்கு கௌரவ இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கிய பல்கலைக்கழகம் எது?
கிழக்குப் பல்கலைக்கழகம்

189) எத்தனையாம் ஆண்டுப் பாராளுமன்றத்திற்கு தேசிய அரசுப் பேரவை என்ற நாமம் சூட்டப்பட்டது?
**1972**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

190) சபாநாயகர் தேசாதிபதியிடம் பதவிப்பிரமாணம் செய்யும் வழக்கம் எந்த ஆண்டு யாப்பு நிறைவேற்றப்பட்டதுடன் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது?
1972

191) பாராளுமன்ற சபாநாயகர் போட்டி இன்றியே தெரிவு செய்யப்படுவது வழக்கம். ஆனால் முதன் முதலில் 1986 ஆம் ஆண்டு மூன்று மாதம் பதவியிலிருந்து நாடாளுமன்றத்தில் போட்டி மூலம் தெரிவுசெய்யப்பட்ட சபாநாயகர் யார்?
டி.பி.சுபசிங்க

192) இலங்கையின் முதலாவது முஸ்லிம் (நாடாளுமன்ற) சபாநாயகர் யார்?
எச்.எஸ்.இஸ்மாயில்

193) இலங்கையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அரசின் அனுமதி பெறாமல் சென்று திரும்பிய போது இராணுவத்தினரின் தாக்குதலுக்கு உள்ளாக்கிப் படுகாயமடைந்த லண்டன் சண்டேடைம்ஸ் பத்திரிகையின் பெண் பத்திரிகையாளரின் பெயர் என்ன?
மேரி கொல்வின்

194) இலங்கையில் முதன் முதலாக குராஷ் என்னும்புதிய விளையாட்டு கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் எத்தனையாம் திகதி அறிமுகம் செய்து வைக்கப்பட்டது?
2002 மார்ச் 30

195) கிரிக்கெட் உலகில் மிக உயர்ந்த விருதாகக் கருதப்படுவது சியட் விருது ஆகும். சியட் தரப்படுத்தலின்படி 2000 2001 ஆம் ஆண்டிற்கான ஆறாவது சியட் சர்வதேச விருதைப் பெற்ற இலங்கைக் கிரிக்கெட் வீரர் யார்?
முத்தையா முரளிதரன்

196) இலங்கையில் பெண்களுக்கு எத்தனையாம் ஆண்டு வாக்குரிமை வழங்கப்பட்டது?
1931



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

197) 1919 ஆம் ஆண்டு நடந்த இலங்கை தேசிய காங்கிரஸின் முதலாவது மாநாட்டில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்க வேண்டும் என முன்மொழிந்தவர் யார்?
நாகம்மா முருகேசு

198) பிரித்தானிய காலணித்துவ நாடுகளிலேயே முதன் முறையாக சர்வஜன வாக்குரிமை பெற்ற நாடு எது?
இலங்கை

199) உலக அரசில் மிகவும் பரபரப்பை ஏற்படுத்திய மமவிடுதலைடுடு என்ற நூலை எழுதியவர் யார்?
கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

200) அமெரிக்க இரட்டைக் கோபுர தாக்குதல்கள் தொடர்பான செய்திக் குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்ட அமெரிக்காவிற்குள் கை நீட்டும் பயங்கரவாதம் என்ற நூலை எழுதிய இலங்கை எழுத்தாளர் யார்?
நிமல் சேதர

201) 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு யாருடைய அரசியல் யாப்பு என்று அழைக்கப்படுகின்றது?
கொல்வின் ஆர்.டி.சில்வா

202) 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு யாருடைய அரசியல் யாப்பு என்று அழைக்கப்படுகின்றது?
ஜே.ஆர்.ஜெயவர்த்தன

203) இலங்கையில் பொருட்கள் சேவைகள் வரி எத்தனையாம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக நீக்கப்பட்டது?
2002

204) 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற சிம்பாப்வே அணியுடனான எல்.ஜி.கிண்ண ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி எத்தனை உலக சாதனைகளை ஏற்படுத்தியது?
ஆறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

205) சிம்பாப்வே அணியுடனான எல்.ஜி.கிண்ண ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 19 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைத்த இலங்கைப் பந்து வீச்சாளர் யார்?
சமிந்த வாஸ்

206) சிம்பாப்வே அணியுடனான எல்.ஜி.கிண்ண ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி எத்தனை ஓட்டங்களுக்கு சிம் பாப்வே அணியின் சகல விக்கட்டுக்களையும் வீழ்த்தி உலக சாதனை படைத்தது?
38 ஓட்டங்கள்

207) சிம்பாப்வே அணியுடனான எல்.ஜி.கிண்ண ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஹட்ரிக் சாதனை புரிந்த முதலாவது இலங்கைப் பந்து வீச்சாளர் யார்?
சமிந்த வாஸ்

208) சிம்பாப்வே அணியுடனான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஹட்ரிக் சாதனை புரிந்த முதலாவது இலங்கைப் பந்து வீச்சாளர் யார்?
நுவான் சொய்ஸா

209) கிரிக்கெட் உலகின் புகழ்பெற்ற சஞ்சிகையான விஸ்டன் சஞ்சிகை 199 ஆண்டின் சிறந்த வீரராக யாரைத் தெரிவு செய்தது?
முத்தையா முரளிதரன்

210) இலங்கை எப்போது குடியரசு நாடாகியது?
1972 மே 22

211) இலங்கையில் 21 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் அனைவருக் கும் வாக்குரிமை வழங்கிய யாப்பு எது?
டொனமூர் யாப்பு

212) சோல்பரி யாப்பின் படியான பாராளுமன்றத் தேர்தல் முதன்முறையாக எத்தனையாம் ஆண்டு நடாத்தப்பட்டது?
1947



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

213) இலங்கையில் 1922 ஆம் ஆண்டு தொழிலாளர் கட்சியை ஆரம்பித்தவர் யார்?
ஏ.ஈ.குணசிங்க

214) இலங்கைப் பாராளுமன்றத்தில் முதலாவது பெண் செயலாளர் நாயகத்தின் பெயர் என்ன?
பிரியானி விஜேசேகர

215) யாழ்ப்பாணத்தில் மிகவும் பழமையான திரையரங்கு ஒன்று வங்கக்கவி ரவீந்திரநாத் தாகூரினால் திறந்து வைக்கப்பட்டதாகும். அத்திரையரங்கின் பெயர் என்ன?
றீகல் திரையரங்கு

216) சுதந்திர இலங்கையின் முதலாவது பாதுகாப்பு அமைச்சரின் பெயர் என்ன?
டீ.எஸ்.சேனநாயக்கா

217) பாடசாலையில் கல்விகற்றுக் கொண்டிருக்கும் போதே நாசா விண்வெளி ஆய்வு நிலையம் சென்று விஞ்ஞானிகளுடன் விண்வெளி சம்பந்தப்பட்ட ஆய்வொன்றில் பங்குபற்றிய முதல் இலங்கை மாணவியின் பெயர் என்ன?
சுசினி டி சில்வா

218) 1968 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் யுனெஸ்கோ நிறுவனத்தினால் உலக சொத்துக்குரிய 38 ஆவது சின்னமாக இலங்கையில் உள்ள முக்கிய கோட்டை ஒன்று பிரகடனப்படுத்தப்பட்டது? அக்கோட்டையின் பெயர் என்ன?
காலிக்கோட்டை

219) நமது நாட்டின் கிரிக்கெட் துறைக்கு பெரும் சேவையாற்றியவர்களுக்கு மமசச்லிப் விருதுடுடு வழங்கும் நாடு எது?
நியூசிலாந்து

220) உலகின் எந்த நாட்டுத் தேசியக்கொடியில் ஹார்ப் என்ற இசைக் கருவியின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கின்றது?
அயர்லாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

221) பாகிஸ்தான் நாட்டின் முதலாவது பிரதமரின் பெயர் என்ன?
முகமது அலி ஜின்னா

222) அமெரிக்கா எந்த நாட்டில் நடத்திய இராணுவத் தாக்குதலுக்கு ஒப்பரேசன் அண்கொண்டா என்று பெயரிட்டது?
ஆப்பானிஸ்தான்

223) பெரு நாட்டின் முதலாவது பெண் பிரதமரின் பெயர் என்ன?
பியாற்றிஸ் மெறினோ

224) ஜேர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லரின் நாஜிக்கட்சியின் சின்னம் எது?
சுவஸ்திகா சின்னம்

225) உலகிலேயே இறப்பர் மரத்தை மக்களிடையே அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவர் யார்?
சேர்.ஹென்றி விக்ஹெம்

226) துப்பறிவதில் தலைசிறந்து விளங்கும் ஸ்கொட்லண்ட்யாட்டின் சின்னம் எது?
நாகபாம்பு

227) உலகின் முதன் முதலில் வைத்தியராகிய (1847) பெண்மணி அமெரிக்காவைச் சேர்ந்தவராவார். அவரின் பெயர் என்ன?
எலிசபெத் பிளக்பெல்

228) உலகப் புகழ் பெற்ற வெஸ்பா ஸ்கூட்டர்தான் முதன் முதலில் தயாரிக்கப்பட்ட ஸ்கூட்டராகும்.அதனை வடிவமைத்து உருவாக்கிய நாடு எது?
இத்தாலி

229) உலகம் முழுவதிலிரும் உள்ள குழந்தைகளைக் கவர்ந்த பார்பி பொம்மைகளுக்கு தன் நாட்டிலே தடை விதித்ததோடு உள்நாட்டிலே தாரா என்ற பொம்மைச் சிறுவனையும் சாரா பொம்மைச் சிறுமியையும் தயாரித்த நாடு எது?
ஈரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

230) முத்திரைகள் காகிதத்திலேயே வரிசையாகவே அச்சடிக்கப் பட்டிருக்கும். ஆனால் சுருளாக சுற்றப்பட்ட முத்திரைகளை பயன் படுத்தும் நாடுகளும்இருக்கின்றன. ஒரே சுருளில் 500 முத்திரைகள முதன் முதலில் அறிமுகப்படுத்திய நாடு எது?
சுவீடன்

231) ரோமன் மாக்சேசே அவர்கள் நினைவாக 1958 ஆம் ஆண்டு முதல் மாக்சேசே விருது வழங்கப்படுகின்றது.அவர் எந்த நாட்டின் அதிபராக பதிவகித்தார்?
பிலிப்பைன்ஸ்

232) இந்திய அரசால் வழங்ப்படும் மிக உயரிய விருது எது?
பாரத ரத்னா விருது

233) முதன் முறையாக யுத்தத்தில் பலூன்களைப் (1794) பயன் படுத்திய நாடு எது?
பிரான்ஸ்

234) முதல் சர்வதேச பலூன் பந்தயம் 1906 ஆம் ஆண்டு நடத்தப் பட்டது. இப்பந்தயத்தை நடத்திய நாடு எது?
பிரான்ஸ்

235) பலூனில் பறந்து சென்று முதன் முதலாக (1971)பராசூட் மூலம் குதித்த முதல் மனிதன் யார்?
அந்ரே கார்னெரின்

236) ஜப்பான் நகரான ஹிரோஷிமா மீது அணுகுண்டை வீசிய அமெரிக்கா விமானத்தின் பெயர் என்ன?
பி.29 பாம்பா எனோலாகே

237) இஸ்ரோ என அழைக்கப்படும் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் எந்த நாட்டில் உள்ளது?
இந்தியா

238) இந்தியா முதன் முதலில் உருவாக்கிய (1981) தகவல் தொடர்பு செயற்கைக்கோளின் பெயர் என்ன?
அப்பிள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

239) நைகர் மேற்கு ஆபிரிக்காவில் உள்ள ஒரு இஸ்லாமிய நாடா ஞமன்ற இந் நாட்டின் தலைநகரின் பெயர் என்ன?
நியாமி

240) உலக வங்கியின் முதலாவது தலைவரின் பெயர் என்ன?
லூயிஸ் பிரிஸ்டன்

241) ஆரம்ப கால கடற் கண்ணிவெடிக்கு என்ன பெயர் சூட்டப் பட்டது?
ரொர் பீடோ

242) கிறிஸ்மஸ் மரத்தை முதன் முதலில் அறிமுகப்படுத்திய நாடு எது?
ஜெர்மனி

243) ரோட்டரிக் கழகத்தைத் தோற்றுவித்தவர் யார்?
போல் பி.ஹாரிஸ்

244) டார்ஜன் திரைப்படத்தில் டார்ஜனாக நடித்துப் புகழ்பெற்றவர் யார்?
ஜொனி வைஸ்முல்வர்

245) ரோட்டரிக் கழகம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
**1941 பெப்ரவரி 23**

246) இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பான் நாட்டு பிரதம மந்திரியாக இருந்தவர் யார்?
அட்மிரல் டோஜோ

247) இரண்டாம் உலகப் போரில் பேர்ல் ஹார்பர் தீவில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த அமெரிக்கப் படைகளை ஜப்பானிய விமானப்படை குண்டு வீசி அழித்தது. அக் குண்டுத்தாக்குதலுக்கு தலைமை வகித்த ஜப்பானிய விமானியின் பெயர் என்ன?
மிட்சவோ புட்சிடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

248) பந்துக்குப் பதிலாக கொல்லப்பட்ட ஆட்டின் உடலைப் பயன் படுத்தி குதிரையில் அமர்ந்தபடி விளையாடும் புஸ்காஷி விளை யாட்டு எந்த நாட்டின் பிரபல்யமான பாரம்பரிய விளையாட்டா கும்?
ஆப்கானிஸ்தான்

249) இந்தியாவின் தலைநகராக எத்தனையாம் ஆண்டிலிருந்து புதுடில்லி இருந்து வருகின்றது?
1911

250) உலகிலே இரண்டாவது பெரிய கண்டம் எது?
ஆபிரிக்கா

251) அமெரிக்கப் பத்திரிகைகளால் தனிமையான ஓர் இந்திய அகதி என வர்ணிக்கப்பட்ட எழுத்தாளர் யார்?
சல்மான் ருஷ்டி

252) சூயஸ் கால்வாய் எந்த நாட்டில் உள்ளது?
எகிப்து

253) 1982 ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டி இந்திய தலைநகர் புதுடில்லியில் நடைபெற்றது. அவ்விளையாட்டுப் போட்டியின் போது வரவேற்புப் பாடலுக்கு இசை அமைத்தவர் யார்?
ரவிசங்கர்

254) பிரிட்டனின் வர்த்தகத்திற்கு ஆற்றிய மகத்தான பங்களிப் பிற்காக 2004 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் மகாராணி இரண்டாவது எலிசபெத்தினால் சேர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட வர்த்தகரின் பெயர் என்ன?
பில் கேட்ஸ்

255) சேக்ஸ்பியர் கடைசியாக எழுதிய நாடகம் எது?
ஹாம்லெட்

256) சோவியத் யூனியன் சிதறுண்டு போவதற்கு காரணமாக இருந்தவர் யார்?
மிகையில் கொர்பசேவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

257) இந்தியாவின் முதல் அணுகுண்டுச் சோதனையின் போது விஞ்ஞானிகள் பயன்படுத்திய சங்கேத வாக்கியம் எது?
புத்தர் சிரித்தார்

258) ஐக்கிய நாடுகள் சபையின் 191 ஆவது உறுப்பு நாடாக இணைந்து கொண்ட மிகச்சிறிய நாடு எது?
கிழக்கு திமோர்

259) 1991 ஆம் ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற பெண்மணி தான் எழுதிய அரசியல் கட்டுரைகளை தொகுத்து அச்சகத்திலிருந்து விடுதலை என்ற பெயரில் நூலாக வெளியிட்டார். அவரின் பெயர் என்ன?
ஆங் சாங் சுகி

260) கலாநிதிப்பட்டம் பெற்ற அமெரிக்க ஜனாதிபதியின் பெயர் என்ன?
வுட்ரோ வில்சன்

261) கோலீட் கோஸ் என்று அழைக்கப்பட்ட நாடு எது?
கானா

262) இரண்டாம் உலகப் போரில் ஹிட்டரின் நாஜிப்படை அஸ்விட்ச் என்ற விஷ வாயுக் கிடங்கில் இரட்சக்கணக்கான யூதர்களைத் திணித்துக் கொலை செய்தது. இப்படைக்கு தலைமை தாங்கிய ஹிட்லரின் நண்பன் யார்?
டொக்ரர் மெல்கல்

263) ஹிட்லரின் நாஜிப்படைகள் ரஷ்ய வீரர்களிடம் சரணடைந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள் எது?
1943 பெப்ரவரி 2

264) இந்தியா எப்போது குடியரசாகியது?
1950 ஜனவரி 26

265) புக் ஒவ் ஹிந்து நேம்ஸ் என்ற புத்தகத்தை எழுதிய இந்தியப் பெண்மணி யார்?
மேனகா சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

266) இந்தியாவின் முதலாவது ஜனாதிபதி என்ற புகழிற்குரியவர் 1952 ஆம் ஆண்டில் பதவி ஏற்றார். அவரின் பெயர் என்ன?
ராஜேந்திரப் பிரசாத்

267) உலகிலேயே அதிக இசைத்தட்டுக்களைக் கொண்ட ஒளிபரப்பு நிலையம் எது?
(B.B.C) லண்டன்

268) இந்திய சிறையில் ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு மதிலுகள் (சுவர்கள்) என்ற மலையாள நாவலை எழுதியவர் யார்?
வைக்கம் முகமது பஷீர்

269) கியூபாவை கெரில்லா யுத்த முறையில் விடுதலை செய்தவர் யார்?
பிடல் காஸ்ட்ரோ

270) உலகிலேயே மிக இளம் வயதில் (20 வயது 357 நாட்கள்) டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட் அணிக்கு தலைமை தாங்கியவர் என்ற பெருமையைப் பெற்ற சிம்பாப்வே நாட்டு வீரரின் பெயர் என்ன?
டடின்டா தைபு

271) கை விளக்கேந்திய காரிகை என சிறப்பித்து அழைக்கப்படும் புளோரன்ஸ் நைட்டிங்கேல் எந்த நாட்டில் பிறந்தார்?
இத்தாலி

272) இந்தியாவில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட ஞாயிற்றுக் கிழமையை கறுப்பு ஞாயிறு என்று அழைக்கின்றார்கள். பாபர் மசூதி எப்போது இடிக்கப்பட்டது?
1992 டிசம்பர் 6

273) அமெரிக்க வரலாற்றில் ஜப்பான் அமெரிக்காவைத் தாக்கிய திகதியாக குறிப்பிடப்பட்டுள்ள திகதி எது?
1941 டிசம்பர் 7

274) சூரியனை அமன் ரா என்று அழைத்தவர்கள் யார்?
எகித்தியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

275) சூரியனை மித்ரா என்று பெயரிட்டு அழைத்தவர்கள் யார்?
ஈரானியர்கள்

276) சூரியனை போப்ஸ் என்றும் அப்போலோ என்றும் அழைத்தவர்கள் யார்?
கிரேக்கர்கள்

277) 1965 ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசிடம் இருந்து முதன் முதலில் கால்ப்பந்தாட்ட வீரர் ஒருவர் சேர் பட்டத்தைப் பெற்றார். சேர் பட்டம் பெற்ற முதல் விளையாட்டு வீரரின் பெயர் என்ன?
மத்யூஸ்

278) கிரிக்கெட் வீரர்கள் மத்தியில் பிரசித்தி பெற்ற சஞ்சிகையான "விஸ்டன் சஞ்சிகை" இங்கிலாந்தில் நடக்கும் போட்டிகளைக் கொண்டே சிறந்த கிரிக்கெட் வீரர்களைத் தெரிவுசெய்து வந்தது? எத்தனையாம் ஆண்டு முதல் உலகம் முழுவதும் நடக்கும் கிரிக்கெட் போட்டிகளை அடிப்படையாகக் கொண்டு சிறந்த வீரர்களை அறிவித்து வருகின்றது?
2001

279) அமெரிக்க ஜனாதிபதிகளில் ஒருவர் அதிக குழந்தைகளின் தந்தை என்ற பெயரைப் பெற்றிருக்கின்றார். அவருக்கு 15 குழந்தை கள். அந்த ஜனாதிபதியின் பெயர் என்ன?
ஜோன் ரெய்லர்

280) இங்கிலாந்து பிரதமர்களில் ஒரே ஒருவர் மட்டுமே சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கின்றார். அவரின் பெயர் என்ன?
ஸ்பென்சர் பெர்சிவல்

281) இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஜப்பானியப் பிரதமராகப் பதவி ஏற்ற ஒருவரே உலகில் நீண்ட நாட்கள் உயிர் வாழ்ந்த பிரதமரா வார். 1887 ஆம் ஆண்டு பிறந்த இவர் 102 ஆவது வயதில் மரணமடைந்தார். அவரின் பெயர் என்ன?
நாருஹிக்கோ ஹிக்காஸ்கனி

282) உலகில் முதல் நடமாடும் வங்கி அமெரிக்காவில் சிக்காகோ நகரில் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
1946



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

283) உலகின் முதல் பற்றூரிகை 1970 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதனை உருவாக்கியவர் யார்?
வில்லியம் அபீஸ்

284) உலகப் புகழ்பெற்ற பார்பி பொம்மைகளை உருவாக்கிய அமெரிக்கப் பெண்மணியின் பெயர் என்ன?
ரூத் ஹேண்டலர்

285) பிக்விக் என்ற புகழ்பெற்ற கதாபாத்திரத்தை உருவாக்கியவர் யார்?
சாள்ஸ் டிக்கன்ஸ்

286) சிறந்த பல்கலைக்கழக முறையை உலகிற்கு முதன் முதலில் அறிமுகம் செய்த நாடு எது?
இங்கிலாந்து

287) முதலாம் உலகப் போரின் போது பிரான்ஸில் அம்புலன்ஸ் வண்டியின் சாரதியாகப் பணியாற்றியவர் யார்?
வோல்ட் டிஸ்னி

288) இந்தியாவிலேயே மிகப் பெரிய நிறுவனங்களில் ஒன்றான டாடா நிறுவனத்தின் அதிபதின் பெயர் என்ன?
ஜே.ஆர்.ரி.டாடா

289) உலகில் முதல் ஆங்கில நாவல் சுயசரிதை முறையில் எழுதப்பட்டுள்ளது. அந்த நாவலின் பெயர் என்ன?
ரொபின்சன் குருசோ

290) முதன் முதலில் 1804 ஆண்டு நீராவியில் இயங்கும் ரயில் இங்கிலாந்தில் இரயில்வே ஓடுபாதையின் மேல் ஓடியது. இதனை ஓட்டியவர் யார்?
ரிச்சாட் டிரேவிதிக்

291) புகழ்பெற்ற அமெரிக்க எழுத்தாளர் சிட்னி போர்ட்டர் என்பவர் தன் பெயர் கவர்ச்சியாக இல்லாததால் பெயரை எப்படி மாற்றிக் கொண்டார்?
ஓ ஹென்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

292) இந்தியாவின் முதல் பெண் விமானியின் பெயர் என்ன?
பிரேம் மாத்தூர்

293) உலகின் முதல் தனியார் துப்பறியும் நிறுவனம் எந்த நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது?
பிரான்ஸ்

294) கணிதத்தில் சமன்பாட்டுக்குப் பயன்படுத்தும் = என்னும் அடையாளத்தைக் கண்டுபிடித்த நாடு எது?
இங்கிலாந்து

295) கோன் ஐஸ்கிரீமை மார்க்கோனி என்பவர் 1909 ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
இத்தாலி

296) உலகின் முதலாவது பொதுமக்களுக்கான இசைத்தட்டு நூலகம் மின்னி சோட்டாவில் 1923 இல் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நூலகம் எந்த நாட்டில் உள்ளது?
அமெரிக்கா

297) இந்தியாவின் முதல் விமானியின் விமான பைலட் லைசன்ஸ் எண் - 1 ஆகும். அந்த விமானியின் பெயர் என்ன?
ஜே.ஆர்.டி.டாடா

299) அகில இந்திய வானொலி நிலையம் ஒவ்வொரு ஆண்டும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களின் புதுமையான படைப்புக்கு வழங்கி வரும் விருதின் பெயர் என்ன?
ஆகாஷவாணி விருது

300) துப்பாக்கியைத் துடைத்துக் கொண்டிருக்கும் போது கை தவறி வெடித்ததால் இறந்து போன புகழ்பெற்ற அமெரிக்க எழுத்தாளர் யார்?
எர்னஸ்ட் ஹெமிங்வே

301) சுதந்திர இந்தியாவில் முதன் முதலில் கட்டப்பட்ட கப்பலின் பெயர் என்ன?
எஸ்.என்.லயல்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

302) சீன நெடுஞ்சுவரைக் கட்டுவித்த சீன மன்னன் யார்?
ஷி - ஹுவாங் - கி

303) கார்ல் மார்க்ஸின் மிக நெருங்கிய நண்பர் யார்?
பிரடெரிக் ஏங்கல்ஸ்

304) ஹிட்லருக்கு பயந்து அமெரிக்காவில் தஞ்சம் புகுந்த அகதிகளில் புகழ்பெற்ற விஞ்ஞானியும் ஒருவர். அவரின் பெயர் என்ன?
அல்பிரட் ஐன்ஸ்டீன்

305) பலஸ்தீன ஹமாஸ் இயக்கத்தின் தாயகரின் பெயர் என்ன?
ஷெக் அஹ்மத் யாஸின்

306) அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனுக்கு "தத்துவக் கலாநிதி" என்ற கௌரவப் பட்டத்தை டெல் அலீவ் பல்கலைக்கழகம் வழங்கிக் கௌரவித்தது. அந்தப் பல்கலைக்கழகம் எந்த நாட்டில் உள்ளது?
இஸ்ரேல்

307) "குராஷ்" விளையாட்டை முதன் முதலில் உலகிற்கு அறிமுகப் படுத்திய நாடு எது?
உஸ்பெகிஸ்தான்

308) மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற்ற பத்தாவது உலகக் கிண்ண ஹொக்கிப் போட்டியில் சம்பியன் கிண்ணத்தை முதற் தடவையாகப் பெற்ற ஹொக்கி அணி எது?
ஜேர்மன் அணி

309) அங்கோலா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட அங்கோலா யுனிற்றா **(UNITA)** போராளி அமைப்பின் தலைவர் யார்?
ஜோன்ஸ் சவீம்பி

310) உலகிலே முதன் முதலில் ஒட்டுநர் பயிற்சிப் பாடசாலை 1901 ஆம் ஆண்டு பிரிட்டனில் ஆரம்பிக்கப்பட்டது? அப்பயிற்சிப் பாடசாலையை ஆரம்பித்தவர் யார்?
வில்லியம் லீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*311)* உடிகாரங்களுக்கும், சொக்லெட்டுக்களுக்கும், வங்கிகளுக்கும் புகழ்பெற்ற நாடு எது?
சுவிட்சர்லாந்து

*312)* ஏப்ரல் முதலாம் திகதியை முட்டாள் தினமாகக் கொண்டா டாமல் விளையாட்டுப் பொம்மைகள் தினமாக கொண்டாடும் நாடு எது?
ஜப்பான்

*313)* காகிதத்தைக் கொண்டு பல உருவங்களைக் கைகளினாலேயே செய்யும் ஒரிகாமி கலையை உலகிற்கு அறிமுகம் செய்த நாடு எது?
ஜப்பான்

*314)* அணிசேரா இயக்கம் (ஹிபுனி) எத்தனையாம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது?
*1947*

*315)* அணிசேரா இயக்கத்தின் தோற்றத்திற்கு வித்திட்டவர் யார்?
ஜவஹர்லால் நேரு

*316)* ஒலிம்பிக் கொடியில் உள்ள ஐந்து நிற வளையங்களும் ஐந்து கண்டங்களைக் குறிக்கின்றன. இவற்றுள் ஆசியாக் கண்டத்தைக் குறிக்கும் வளையம் எந்த நிறத்தில் அமைந்துள்ளது?
மஞ்சள்

*317)* இரவீந்திரநாத் தாகூரின் சாந்தி நிகேதனின் போதிப்பதற்காக தாகூர் தேர்ந்தெடுத்த நடன வகை எது?
மணிப்புரி

*318)* முதலாவது புவி உச்சி மகாநாடு எத்தனையாம் ஆண்டு நடைபெற்றது?
*1992*

*319)* சம்பா என்ற நடனம் எந்த நாட்டில் மிகவும் புகழ்பெற்ற நடனமாகும்?
பிரேசில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

320) பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகத்தைத் தெரிவு செய்வதற்காக 2003 டிசம்பர் 5 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டுப் படுதோல்வியடைந்த இலங்கையின் வெளி நாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பெற்ற வாக்ககள் எத்தனை?
பதினொன்று

321) கிழக்கு திமோரின் நெல்சன் மண்டேலா என அழைக்கப்படும் தலைவரின் பெயர் என்ன?
சனானா கஸ்மாவோ

322) அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ யினால் தத்தெடுத்துப் பயிற்சி வழங்கப்பட்ட சவுதி அரேபிய நாட்டைச் சேர்ந்த ஒருவரே அமெரிக்காவிற்கு எதிராகப் போராடும் அல்கொய்டா இயக்கத்தை உருவாக்கினார்.அவரின் பெயர் என்ன?
பின்லாடன்

323) அலுவலகங்களில் காசுக் கட்டளை அனுப்பும் முறையை முதன் முதலில் பிரிட்டிஷ் தபால் இலாகாவே தொடங்கியது. எத்தனை யாம் ஆண்டு தொடங்கியது?
1786

324) பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் ஒருவர் தனது தாயின் பெயரில் நினைவு மருத்துவமனை ஒன்றைக் கட்டினார். அவரின் பெயர் என்ன?
வாசிம் அக்ரம்

325) மால்டா நாட்டின் முதல் பெண் அதிபரின் பெயர் என்ன?
அகதா பார்பரா

326) இரண்டாவது புவி உச்சி மாநாடு எத்தனையாம் ஆண்டு நடைபெற்றது?
2002

327) பிரிட்டிஷ் குத்துச்சண்டை வீரர் ஒருவர் ஓஷன் லெவன் என்ற திரைப்படத்தில் குத்துச்சண்டை வீரனாக நடித்துள்ளார். அவரின் பெயர் என்ன?
லெனொக்ஸ் லூயிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

328) இரும்புச் சீமாட்டி என அழைக்கப்பட்ட பெண் பிரதமர் யார்?
மார்கிரெட் தாட்சர்

329) நியூயோர்க் நகரின் மன் ஹட்டன் பகுதியில் உள்ள உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரங்கள் மீது மீதான தாக்குதல் நடத்தப்பட்ட திகதி எது?
2001 செப்ரெம்பர் 11

330) தென் ஆபிரிக்காவின் ரியோடி ஜெனிரோ நகரில் நடைபெற்ற எத்தனையாவது புவி உச்சி மாநாட்டில் இம்மாநாட்டிற்கு "நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி தொடர்பான உலக உச்சி மாநாடு" *(World Summit Sustainable Development)* எனப் பெயரிடப்பட்டுள்ளது?
இரண்டாவது

331) இந்திய திரைப்பட உலகில் புகழ்பெற்ற நடிகர் ஒருவர் கவிஞர் ஹர்பனஸ்ராய் பச்சனின் மகனாவார். அந் நடிகரின் பெயர் என்ன?
அபித்தா பச்சன்

332) பிரிட்டிஷ் பிரதமர் வசிக்கும் 10, டவுனிங் தெருக் கட்டடம் 1680 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அக்கட்டடத்தைக் கட்டியவர் யார்?
ஜோர்ஜ் டவுனிங்

333) அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்னர் அமெரிக்க மக்களைப் பீதிக்குள்ளாக்கிய நோய்க் கிரிமி எது?
அந்திராக்ஸ் கிருமி

334) இருபதாம் நூற்றாண்டின் சிறந்த இந்தியக் கிரிக்கெட் வீரர் விருதை விஸ்டன் சஞ்சிகை எந்த கிரிக்கெட் வீரருக்கு வழங்கியது?
கபில்தேவ்

335) வியன்னாவில் பிறந்த இயக்குனர் ஒருவர் 1931 ஆம் ஆண்டு குழந்தைகளைக் கொல்லும் ஒரு கொலைக்காரனைக் கண்டு பிடிக்கும் கதையமைப்பைக் கொண்ட "M" என்ற படத்தை இயக்கினார். அவரின் பெயர் என்ன?
பிரிட்ஸ் லேங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*336)* இங்கிலாந்து நாட்டில் தயாரான முதல் படம் **(1929)** எது?
பிளெக் மெயில்

*337)* **1951** ஆம் ஆண்டு வெளிவந்த த அபிரிக்கன் குயின் என்ற மகத்தான படத்தை இயக்கிய இயக்குநர் யார்?
ஜோன் ஹஸ்டன்

*338)* **1947** ஆம் ஆண்டு வெளியான "ஜென்டில்மேன்ஸ் அக்றிமென்ட்" *(GENTTLEMANS AGREEMENT)* என்ற படத்திற்காகச் சிறந்த இயக்குநருக்கான ஒஸ்கார் விருதைப் பெற்றவர் யார்?
ஜோன் ஹஸ்டன்

*339)* சார்லி சாப்ளின் என்ற நகைச்சுவை நடிகர் நடித்த முதற் படத்தின் பெயர் என்ன?
மேக்கிங் ஏ லிவிங்

*340)* சார்லி சாப்ளின் இயக்கிய முதல் படத்தின் பெயர் என்ன?
கோ ரூ இன் காபரே

*341)* உலகப் புகழ்பெற்ற பதர் பாஞ்சலி என்ற படத்தை இயக்கிய இயக்குநரின் பெயர் என்ன?
சத்யஜித்ரே

*342)* **1990** ஆம் ஆண்டில் பிலிமின் ஓரத்தில் ஒலியலையை ஒளியலையாக மாற்றிப் பதிவு செய்ய முடியும் என்பதை நிரூபித்த ஜெர்மனிய விஞ்ஞானிகளின் பெயர் என்ன?
எர்னஸ்ட்ரூமர்

*343)* **1952** ஆம் ஆண்டில் ஈஸ்மென் கலர் பிலிமைக் கண்டு பிடித்து அறிமுகம் செய்தவர் யார்?
கொடெக்

*344)* ஹொலிவூட் சினிமாவை மட்டுமல்ல உலக சினிமாவையே திசை திருப்பிய படமான சிட்டிசன் கேன் படம் **1941** ஆம் ஆண்டு வெளிவந்தது. அப்படத்தின் இயக்குநரின் பெயர் என்ன?
ஓர்சன் வெல்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

345) பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு நாட்டுப்புறப் பாடலை அடிப்படையாகக் கொண்ட த வெர்ஜின் ஸ்பிரிங் என்ற படம் இரத்தம் தோய்ந்த ஒரு பழி வாங்குதலை விளக்குகிறது. 1960 ஆம் ஆண்டு வெளிவந்த இப்படத்தை இயக்கியவர் யார்?
இங்க்மர் பெர்க்மன்

346) உலகிலேயே உதிக படங்களைத் தயாரித்து அதாவது 101 படங்களைத் தயாரித்து கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தின் 2001 ஆம் ஆண்டுப் பதிப்பில் இடம் பிடித்தவர் யார்?
டி.ராமநாயுடு

347) திரைப்பட உலகில் முதல் குழந்தை நட்சத்திரம் என்ற பெருமையைப் பெற்றவர் யார்?
ஜக்கி சான்

348) அமெரிக்க உளவு நிறுவனமான எவ்.பி.ஐ எந்த நடிகரிடம் நான் கம்யூனிசத்தை வெறுக்கிறேன் என்று எழுதித் தருமாறு கேட்டு மிரட்டியது?
சார்லி சாப்ளின்

349) ஒஸ்கார் வரலாற்றிலேயே முதன் முறையாக வெளிநாட்டுப் படம் ஒன்றில் நடித்த நடிகர் ஒருவருக்கு சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருது 1999 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. அந்த நடிகரின் பெயர் என்ன?
ராபாட்டோ பெனிக்னி

350) இலங்கையின் முதலாவது சிங்களப் பேசும் படம் எது?
பிறேமாவதி

351) இலங்கையின் முதலாவது சிங்களப் பேசும் படத்தைத் தயாரித்தவர் ஒரு தமிழராவார். அவரின் பெயர் என்ன?
சுந்தரம் மதுரநாயகம்

352) முதன் முதலில் "இரட்டை வேட உத்தி" அறிமுகம் செய்யப் பட்ட சிங்களப் படம் எது?
உதும் விஷவாசய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

353) இந்தியப் பாடகி லதா மங்கேஷ்கார் சிங்களப் பாடல் ஒன்றைப் பாடியிருக்கிறார். அவர் பாடிய சிங்களப் பாடல் இடம்பெற்ற படத்தின் பெயர் என்ன?
சட சுலங்

354) சிறுகதை ஒன்றை அடிப்படையாகக் கொண்டு முதன் முதலாக இலங்கையில் சிங்களத் திரைப்படம் உருவாக்கப்பட்டது. அப்படத்தின் பெயர் என்ன?
நலங்கனா

355) சிங்களப் படங்கள் இலங்கையில் தயாரிக்கப்பட வேண்டும். வெளிநாட்டுப் படச்சாயலில் சிங்களப் படங்கள் உருவாக்கப் படக்கூடாது என்ற சட்டம் யாருடைய ஆட்சியின் காலத்தில் அமுலுக்கு வந்தது?
எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க

356) வயது வந்தவர்களுக்கு மட்டும் என்ற அறிவித்தலுடன் வெளிவந்த முதலாவது சிங்களப்படம் 1956 ஆம் ஆண்டு வெளி வந்தது. அப்படத்தின் பெயர் என்ன?
சாரதா

357) முதன் முதலில் சிங்களப்படம் ஒன்றில் கர்நாடக மெட்டில் அமைந்த பாடல் ஒன்று 1972 ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டது. அப்படத்தின் பெயர் என்ன?
ஹிதக பிபுனு மலக்

358) சிங்கத் திரைப்படம் ஒன்றை முதல் முதலில் இயக்கிய முதலா வது இலங்கைத் தமிழர் என்ற பெருமையைப் பெற்றவர் யார்?
ரி.சோமசேகரன்

359) தமிழில் சேகுவேராவைப் பற்றி முதல் ஆவணப் படத்தை (40 நிமிடங்கள்) இயக்கியவர் யார்?
அ.முத்துக்கிருஷ்ணன்

360) இலங்கைத் தமிழர் ஒருவர் முதன் முதலில் இயக்கிய சிங்களத் திரைப்படத்தின் பெயர் என்ன?
சடசுலங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

361) இந்தியாவில் புகழ்பெற்ற ஏ.வி.எம் நிறுவனம் தயாரித்த முதலாவது சிங்களத் திரைப்படத்தின் பெயர் என்ன?
தொஸ்த்தர

362) சிறந்த மலையாளப் படங்களை இயக்கிய சேதுமாதவன் சிங்களப் படம் ஒன்றையும் இயக்கியிருக்கிறார். அப்படத்தின் பெயர் என்ன?
வீர விஜய

363) 1965 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற மூன்றாவது உலகத் திரைப்பட விழாவில் முதன் முதலில் சிங்களப் படம் ஒன்றிற்று சர்வதேச விருதான தங்க மயில் விருது கிடைத்தது.அப்படத்தின் பெயர் என்ன?
கம்பெரலிய

364) இலங்கையின் சத்தியஜித்ரே எனப் புகழப்படும் இயக்குநர் 1956 ஆம் ஆண்டுதான் சிங்களத் திரையுலகல் நுழைந்தார். அவரின் பெயர் என்ன?
லெஸ்டன் ஜேம்ஸ் பீரிஸ்

365) சர்வதேச ரீதியிலான விருதொன்றைப் பெற்ற முதலாவது சிங்களத் திரைப்படத்தை இயக்கிய இயக்குனர் யார்?
லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ்

366) சிங்களப் படங்கள் ஆரம்பத்தில் இந்தியாவிலேயே தயாரிக் கப்பட்டன. இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதலாவது படத்தின் பெயர் என்ன?
பண்டா நரயட்ட பெமினிம

367) முதன் முதலில் சிங்களவர் ஒருவர் சிங்களத் திரைப்படத்திற்கு இசையமைத்தார். அப்படத்தின் பெயர் என்ன?
அதட்டவெடிய ஹெட்ட ஹொரந்தாய்

368) சர்வதேச விருதொன்றைப் பெற்ற முதலாவது சிங்கள நடிகை என்ற பெயரைப் பெற்றவர் யார்?
மாலினி பொன்சேகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

369) திரைப்படமாக அதேபெயரில் உருவாகிய கலையம்சம் மிக்க முதலாவது நாவலான கம்பெரலிய நாவலை எழுதிய எழுத்தாளர் யார்?
மார்டின் விக்கிரமசிங்க

370) முதன் முதலில் சிங்களவர் ஒருவர் சிங்களப் படத்திற்கு இசையமைத்தார். முதன் முதல் சிங்களப் படமொன்றிற்கு இசையடைத்த முதலாவது சிங்கள இசையமைப்பாளர் என்ற பெருமையைப் பெற்றவர் யார்?
டபிள்யூ.ஆர்.அமரதேவ

371) தமிழ் சினிமா உலகின் முதல் பெண் இயக்குநர் என்ற பெருமைக் குரியவர் யார்?
டி.பி.ராஜலட்சுமி

372) தமிழ் சினிமா உலகின் முதல் பெண் இயக்குநரின் படம் 1936 ஆம் ஆண்டு வெளிவந்தது. அப்படத்தின் பெயர் என்ன?
மிஸ் கமலா

373) தமிழின் முதல் சமூகப் படம் என்ற பெருமையைப் பெற்ற படத்தின் பெயர் என்ன?
மேனகா

374) தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ராமச்சந்திரன் முதன் முதலில் (1936) இன்ஸ்பெக்டர் வேடத்திலேயே நடித்தார். அவர் நடித்த முதற் படத்தின் பெயர் என்ன?
சதி லீலாவதி

375) புராணப்படங்களில் கடவுளர் வேடங்களில் நடிப்பதில்லை என்ற கொள்கையுடைய நடிகரொருவர் இறுதிவரை தமது கொள்கையில் உறுதியாக இருந்தார். அந்த நடிகர் யார்?
கே.பி.கேசவன்

376) நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த முதல் திரைப்படம் 1952 ஆம் ஆண்டு வெளிவந்தது. அப்படத்தின் பெயர் என்ன?
பராசக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

378) முதலாவது உலகத் திரைப்பட விழா எத்தனையாம் ஆண்டு நடைபெற்றது?
1932

379) முதல் இந்திய உலகத் திரைப்பட விழா போட்டிகளின்றி பம்பாயில் நடைபெற்றது. அவ்விழா நடந்த ஆண்டு எது?
1952

380) இந்திய உலகத் திரைப்பட விழாச் சின்னம் 1975 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய உலகத் திரைப்பட விழாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட அச்சின்னம் எது?
மயில்

381) இந்தியாவில் முதல் இசையமைப்பாளரின் பெயர் என்ன?
பிரோல் ஷாமிஸ்திரி

382) தென்னிந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் திரைப்படம் (ஊமைப் படம்) எது?
கீசகவதம்

383) ரஷ்யாவின் முதலாவது விண்வெளி வீராங்கனை முதன் முதலில் 1963 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் திகதி விண்ணில் பயணம் செய்தார். அவர் பயணம் செய்த விண்கலத்தின் பெயர் என்ன?
வாஸ்டாக் – 6

384) அமெரிக்காவின் முதல் விண்வெளி வீராங்கனை 1983 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் திகதி விண்ணில் முதற் பயணத்தை மேற்கொண்டார். அவர் பயணம் செய்த விண்வெளி ஓடத்தின் பெயர் என்ன?
சலஞ்சர்

385) 1986 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் திகதி சலஞ்சர் விண்வெளி ஓட விபத்தில் அகால மரணமான அமெரிக்காவின் இரண்டாவது விண்வெளி வீராங்கனையின் பெயர் என்ன?
ஜூடித் ஏ.ரஸ்னிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

386) அமெரிக்காவின் விண்வெளி வரலாற்றில் முதன்முறையாக சலஞ்சர் விண்வெளி ஓடத்திலிருந்து 1984 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி) அந்தரத்தில் இறங்கி நடந்து சாதனை புரிந்த வீராங்கனை யார்?

கதரின்.டி.சல்லிவான்

387) அமெரிக்காவின் நாசா விண்வெளி நிலையம் விண்கலத்தில் பறந்தவாறு தாம்பத்தியம் நடத்தினால் என்ன என்ன மாற்றங்கள் ஏற்படும் என்பதை அறிய மார்க் சீலி ஜோன் என் டேவிஸ் என்கின்ற யதார்த்தத் தம்பதியரை தேர்ந்தெடுத்து 1992 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி விண்வெளிக்கு அனுப்பியது. அந்த யதார்த்தத் தம்பதியர் பயணம் செய்த விண்வெளி ஓடத்தின் பெயர் என்ன?

எண்டவர்

388) அமெரிக்க விண்வெளி ஓடமான கொலம்பியாவில் 1997 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் திகதி பயணம் செய்த இந்தியாவின் முதல் விண்வெளி வீராங்கனை யார்?

கல்பனா சால்வா

389) ரஷ்ய விண்கலத்திற்குச் சென்று ஆய்வுகளை நடாத்திய முதலாவது அமெரிக்க வீராங்கனையின் பெயர் என்ன?

ஷானன் டபிள்யூ சூசிட்

390) விண்வெளியை (1957 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி) முதன் முதலில் சுற்றி வந்த செயற்கைக்கோள் எந்த நாட்டைச் சேர்ந்தது?

ரஷ்யா

391) விண்வெளியை (1957 ஆம் ஆண்டு) முதன் முதலில் சுற்றி வந்த முதற் செயற்கைக்கோளின் பெயர் என்ன?

ஸ்புட்னிக் - 1

392) முதன் முதலில் (1957 ஆம் ஆண்டு) ரஷ்யா விண்வெளிக்கு முதல் உயிரிணத்தை அனுப்பி வைத்தது. அந்த உயிரினம் எது?

நாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

393) முதன் முதலில் ரஷ்யா விண்வெளிக்கு அனுப்பி வைத்த உயிரினத்தின் பெயர் என்ன?
லைகா

394) முதன் முதலில் ரஷ்யா அனுப்பி வைத்த உயிரிணத்தை சுமந்து சென்ற விண்கலத்தின் பெயர் என்ன?
ஸ்புட்னிக் – 2

395) 1969 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதி முதன் முதலில் சந்திரனில் காலடி வைத்த விண்வெளி வீரரின் பெயர் என்ன?
நீல் ஆம்ஸ்ரோங்

396) முதன் முதலாக விண்வெளிக்குச் (1961 ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி ) சென்ற அமெரிக்க விண்வெளி வீரரின் பெயர் என்ன?
அலன்.பி.ஷெப்பர்ட்

397) விண்வெளியில் முதன் முதலில் நடந்த விண்வெளி வீரர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
ரஷ்யா

398) முதன் முதலில் விண்வெளிக்குச் சென்று திரும்பிய விண்வெளி வீரர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
ரஷ்யா

399) சந்திரனுக்கு ரஷ்யா (1959 ஆம் ஆண்டு) முதன் முதலில் அனுப்பிய செய்றகைக் கோளின் பெயர் என்ன?
லூனா – 1

400) சீனா பூமியின் வளங்களைக் கண்டறிய லோலாங் மார்க் - 4 என்ற ரொக்கட் மூலம் விண்ணில் செலுத்திய விண்கலத்தின் பெயர் என்ன?
இசட் வை - 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

401) இந்தியா முதன் முதலில் (1975) ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 19 ஆம் திகதி) விண்வெளிக்கு அனுப்பிய செயற்கைக் கோளின் பெயர் என்ன?
ஆரியபட்டா

402) மைக்கேல் கொலின்ஸ், நீல் ஆம்ஸ் ரோங், எட்வின் ஒஸ்ரின் ஆகியோர் முதன் முதலில் சந்திரனுக்குச் சென்றனர். அவர்கள் சென்ற விண்வெளி ஓடத்தின் பெயர் என்ன?
அப்பலோ - 11

403) இந்தியாவின் முதல் விண்வெளி வீரர் என்ற சிறப்புக்குரியவர் யார்?
ராகேஷ் சர்மா

404) அமெரிக்கா (1973 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி) முதன் முதலில் விண்ணிற்கு அனுப்பிய விண்வெளி நிலையத்தின் பெயர் என்ன?
ஸ்கைலாப் - 1

405) உலகின் முதலாவது விண்வெளி வீராங்கனையின் பெயர் என்ன?
லவன்டினா. வி. தெரஸ்கோவா

406) உலகின் இரண்டாவது விண்வெளி வீராங்கனையே (1989 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 17 ஆம் திகதி) விண்கலத்திலிருந்து அண்டவெளியில் இறங்கி மிதந்த முதல் பெண்மணி என்ற பெருமையைப் பெறுகிறார். அவரின் பெயர் என்ன?
ஸ்வெத்லோனா, வை. சவித்ஸ்கையா

407) சுவிட்சர்லாந்து நாட்டின் முதல் விண்வெளி வீரரின் பெயர் என்ன?
கிளாடி நிக்கோலியர்

408) அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒருவரின் மனைவி தனது வாழ்க்கை வரலாறை லிவிங் ஹிஸ்ட்ரி (*Living History*) என்ற பெயரில் எழுதியுள்ளார். அவரின் பெயர் என்ன?
ஹிலாரி கிளின்டன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

409) இலங்கையின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு (2003 ஜுன் 11 ஆம் திகதி) ஆசியாவின் கதாநாயகன் என்ற விருதை வழங்கிய உலகப் புகழ்பெற்ற சஞ்சிகை எது?
ரைம்

410) புஜியான் ஸ்ரெய்ன் என்று அழைக்கப்படுகின்ற புதுவகை வைரஸ் நோய் முதன் முதலில் எந்த நாட்டு மக்களைப் பீடித்தது?
அமெரிக்கா

411) உலகிலேயே மிக அதிகமாக சம்பளம் வாங்கும் நடிகை என்னும் பெருமையைப் பெற்று 2004 ஆம் ஆண்டு வெளிவந்த கின்னஸ் சாதனைகள் புத்தகத்தில் இடம்பிடித்த நடிகையின் பெயர் என்ன?
கேமரூஸ் டயஸ்

412) பிக் டாடி என அழைக்கப்பட்ட முன்னாள் சர்வாதிகாரியின் பெயர் என்ன?
இடி அமீன்

413) த இங்கிலீஷ் ரோஸஸ் என்ற நூலை எழுதிய பிரபல பொப் பாடகியின் பெயர் என்ன?
மடோனா

414) அரிசி உற்பத்தி அதிகரிப்பை ஊக்கப்படுத்தும் வகையில் எந்த ஆண்டை ஐ.நா. அரிசி ஆண்டாக அறிவித்தது?
2004

415) 1926 ஓகஸ்ட் 6 ஆம் திகதி ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்து சாதனை நிலை நாட்டிய முதற் பெண் சாதனையாளர் யார்?
ஜெர்ட்ரூட் எட்ரிலி

416) "ONE MORE CHANCE" என்ற இசை அல்பத்தை வெளியிட்ட பிரபல பாடகரின் பெயர் என்ன?
மைக்கல் ஜக்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**417)** 2004 ஆம் ஆண்டு அன்ட்டிகுவா மைதானத்தில் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆட்டமிழக்காமல் 400 ஓட்டங்களைப் பெற்று உலக சாதனை படைத்த மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர் யார்?

பிரையன் லாரா

**418)** பி.பி.சி தொலைக்காட்சியின் 2003 ஆம் ஆண்டுக்கான சிறந்த பி.பி.சி விளையாட்டு வீரர் விருதை வென்ற இங்கிலாந்து ரக்பி அணியின் நட்சத்திர வீரரின் பெயர் என்ன?

ஜொனி வில்கின்சன்

**419)** 2003 ஆம் ஆண்டுக்கான "அமைதிக்கான விருது" பெற்ற செக்கேஸ்லோவாக்கியா நாட்டு முன்னாள் ஜனாதிபதியின் பெயர் என்ன?

லக்லாவ் ஹாவெல்

**420)** பொது நலவாய அமைப்பினை விலங்குகளின் பண்ணை என்று கூறியவர் யார்?

ரொபர்ட் முகாபே

**421)** அமெரிக்காவில் இருந்து வெளிவரும் எந்தப் பத்திரிகைக்கு 2004 ஆம் ஆண்டு ஐந்து புலிட்சர் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன?

லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்ஸ்

**422)** உலகப் புகழ் பெற்ற கேலிச் சித்திரப் பாத்திரமான *DENNIS THE MENACE* ஐ உருவாக்கிய அமெரிக்காவின் பிரபல கேலிச் சித்திரக் கலைஞரின் பெயர் என்ன?

ஹாங்க் கெற்ஷாம்

**423)** 1964 ஆம் ஆண்டு மைக்கல் ஜக்சனைப் பிரதான பாடகராகக் கொண்டு அவரது குடும்பத்தினரால் உருவாக்கப்பட்ட இசைக் குழுவின் பெயர் என்ன?

ஜக்சன் 5 இன்டியானா

**425)** இந்தியாவிலே மிகக் குறைந்த வயதில் பத்மஸ்ரீ விருது பெற்ற செஸ் வீரர் யார்?

விஸ்வநாதன் ஆனந்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

426) முதல் கிறிஸ்மஸ் முத்திரை 1898 ஆம் ஆண்டு வெளி யிடப்பட்டது. அவ் முத்திரையை வெளியிட்ட நாடு எது?
கனடா

427) 2003 ஆம் ஆண்டிற்கான இலக்கிய நோபல் பரிசை பெற்ற தென்னாபிரிக்க எழுத்தாளர் இரண்டு முறை (1989 மற்றும் 1999) புக்கர் பரிசையும் பெற்றிருக்கின்றார். விளம்பரத்தை விரும்பாத அவ் எழுத்தாளரின் பெயர் என்ன?
ஜோன் மேக்ஸ்வெல் கோயட்ஸ்

428) இந்தியாவின் பறவை மனிதர் *(THE BIRDMAN OF INDIA)* என்று அழைக்கப்படுபவரின் பெயர் என்ன?
சலீம் அலி

429) 2003 ஆம் ஆண்டிற்கான நாயகனாக *(PERSON OF THE YEAR)* அமெரிக்கப் படைவீரனைத் தெரிவு செய்த உலகப் புகழ்பெற்ற சஞ்சிகை எது?
ரைம்

430) உலகிலேயே தேசியக் கொடியில் அந்த நாட்டின் வரைபடத் தைக் கொண்ட ஒரே நாடு எது?
சைப்ரஸ்

431) இந்தியா 2020 என்ற நூலை எழுதியவரின் பெயர் என்ன?
டாக்டர் அப்துல்கலாம்

432) 2000 ஆம் ஆண்டு சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் எத்தனை நாடுகள் பங்குபற்றின?
199 நாடுகள்

433) கணினிக்கான மவுஸைக் கண்டுபிடித்தவர் யார்?
டக்ளஸ் ஏஞ்சல் பார்ட்

434) மிக்கிமவுஸ் கதாபாத்திரத்தை வோல்ட் டிஸ்னி உருவாக்கியது போன்று கோர் பீல்ட் என்ற பூனைக் கதாபாத்திரத்தை உருவாக்கிய அமெரிக்கரின் பெயர் என்ன?
ஜம் டேவிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

435) 1989 ஆண்டு தனக்குக் கிடைத்த அமைதிக்கான நோபல் பரிசை ஆபிரிக்காவின் பசியில் வாடும் மக்களுக்கு நன்கொடையாக அளித்தவர் யார்?
தலாய் லாமா

436) உலகப் புகழ் பெற்ற ரைம் பத்திரிகையின் அட்டைப்படத்தில் இடம்பெற்ற முதல் இந்திய விளையாட்டு வீரரின் பெயர் என்ன?
சச்சின் டெண்டுல்கர்

437) மேப்பிள் என்ற மரத்தின் இலை எந்த நாட்டின் தேசியக் கொடியில் இடம்பெற்றுள்ளது?
கனடா

438) எந்த நாட்டின் தேசியக் கொடியில் AK47 துப்பாக்கியின் படம் இடம்பெற்றுள்ளது?
காங்கோ

439) இணையத்தில் புகழ் பெற்றுள்ள யாஹூ (YAHOO) தளத்தை டேவிட் பீலோ என்ற நண்பருடன் சேர்ந்து உருவாக்கியவர் யார்?
ஜொரி யங்

440) 15 வது ஆசிய விளையாட்டு விழா எத்தனையாம் ஆண்டு நடைபெற்றது?
2006

441) ஒவ்வொரு வருடமும் வண்டுச் சண்டை போட்டியை நடத்தும் நாடு எது?
தாய்லாந்து

442) பிரித்தானிய அரசினால் "கொமாண்டர் ஒவ் பிரிட்டிஷ் என்பயர் விருதி" (1999) வழங்கிக் கௌரவிக்கப்பட்ட முதல் ஜேம்ஸ் பாண்ட் நடிகர் யார்?
ரோஜர் ஜோர்ஜ் மூர்

443) ஜுபிடர் சிம்பனி இசையை 15 நாட்களில் உருவாக்கிய இசைமேதை யார்?
மொசாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

444) உலகில் பெண்களுக்கு வாக்குரிமை வேண்டும் எனக் குரல் கொடுத்த முதல் பெண்மணி யார்?
எமலின் பான்கிரஸ்ட்

445) பேருந்துகளுக்குப் பாதை எண்ணை 1906 ஆம் ஆண்டு முதல்ஆம்னி பேருந்து கம்பனி தான் முதலில் வழங்கியது? அந்தக் கம்பனி எந்த நாட்டைச் சேர்ந்தது?
பிரிட்டன்

446) நோபல் பரிசு பெற்ற முதல் அரேபிய எழுத்தாளர் என்ற பெருமையை எகிப்து நாட்டு எழுத்தாளர் ஒருவர் பெற்றார். 1988 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற அவரின் பெயர் என்ன?
நகூப் மஹபூஸ்

447) கோகோ கோலா பானம் எத்தனையாம் ஆண்டு கண்டுபிடிக் கப்பட்டது?
1886

448) உலகின் முதல் வங்கியான "BANK OF SWEDEN" எத்தனையாம் ஆண்டு தொடங்கப்பட்டது?
1656

449) அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ் சி.ஐ.ஏ இயக்குநராக எத்தனையாம் ஆண்டு பணியாற்றினார்?
1976

450) கால்பந்தாட்ட விளையாட்டில் சிறந்து விளங்கியமைக்காக பிரிட்டனின் ராணி இரண்டாம் எலிசபெத் அவர்களிடம் 2003 ஆம் ஆண்டு சேர் பட்டத்தைப் பெற்ற கால்பந்தாட்ட வீரர் யார்?
டேவிட் பெக்கம்

451) 2003 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு ஈரானைச் சேர்ந்த இஸ்லாமியப் பெண் வழக்கறிஞருக்கு வழங்கப்பட்டது. அவரின் பெயர் என்ன?
ஷெரின் இபாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

452) 2003 ஆம் ஆண்டு பொப் சனல் எம்.ரி.வி வழங்கிய மனித நேய விருதைப் பெற்றவர் யார்?
ஆங்சான் சூகி

453) எதிரிகளின் இராணுவக் கப்பல்களைத் தாக்கி அழிக்கவல்ல பிமோஸ் ஏவுகணைகளை தயாரித்த நாடு எது?
இந்தியா

454) அமெரிக்காவிற்கு முதன் முதலாக நோபல் பரிசைப் பெற்றுக் கொடுத்தவர் அமெரிக்காவில் பிறந்தவரல்ல. ஜெர்மனியில் பிறந்து அமெரிக்காவில் குடியேறியவராவார். அமெரிக்காவுக்கு 1907 ஆம் ஆண்டு நோபல் பரிசைப் பெற்றுக்கொடுத்த அவரின் பெயர் என்ன?
ஏ.பி.மைக்கேல்சன்

455) உலகிலே முதன் முதலாக கிரிக்கெட் விளையாட்டுக்கான துடுப்பாட்ட மட்டையை வடிவமைத்தவரின் பெயர் என்ன?
ஜோன் ஸ்மால்

456) பிரிட்டிஸ் எயர்வைஸ் விமான சேவை நிறுவனத்தால் பயன்படுத்தப்பட்டு வந்த கொன்கோட் ரக விமானம் (சுப்பசோனிக்) எப்போது முதல் சேவையில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்டது?
2003 ஒக்ரோபர் 24

457) அமெரிக்கப் படைகள் யாரைக் கைது செய்வதற்கான தேடுதல் நடவடிக்கைக்கு ஒப்பிரேஷன் ரெட்டான் (செவ் விடியல் ) என்ற பெயரைச் சூட்டியது?
சதாம் ஸ¯சைன்

458) சர்வதேச நாடுகளில் அமெரிக்கா நடத்திவரும் மோசமான அரசியலின் திருகுதாளங்களையும் சந்தர்ப்பவாதங்களையும் அம்பலப்படுத்தும் 400 பக்கங்களைக் கொண்ட வஞ்சக அரசு என்ற நூலை எழுதிய அமெரிக்க எழுத்தாளரின் பெயர் என்ன?
வில்லியம் ப்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

459) 2003 ஆம் ஆண்டு அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற நான்காவது மகளிர் உலகக் கோப்பை கால்பந்தாட்ட போட்டியில் உலகக் கோப்பையை (முதற்தடவையாக) கைப் பற்றிய அணி எது?
ஜேர்மன் மகளிர்அணி

460) ஐந்தாவது மகளிர் உலகக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டி 2007 ஆம் ஆண்டு எந்த நாட்டில் நடைபெற்றது?
சீனா

461) ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதலின் போது தனது இரு கைகளையும் இழந்த 14 வயதான ஈராக்கியச் சிறுவனின் பெயர் என்ன?
அலி இஸ்மாயில்

462) அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கை வரலாற்றை ஆபிரகாம் லிங்கன் என்ற பெயரில் நூலாக எழுதி வெளியிட்டவர் யார்?
ஜோன் டிரிங் வோட்டர்

463) சென்னையில் பிறந்த ஒருவர் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவராக இருந்து ஓய்வுபெற்றுள்ளார்.அவரின் பெயர் என்ன?
நசார் ஹுசைன்

464) 1986 ஆண்டு முதன் முதலில் பிரிட்டனில் வளர்க்கப்படும் மாடுகளுக்கு "மாட்கௌ" நோய் ஏற்பட்டிருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டு முற்பாதுகாப்பு நடவடிக்கையாக 37 இலட்சம் மாடுகள் பிரிட்டனில் அழிக்கப்பட்டன. 2003 டிசம்பர் 23 ஆம் திகதி எந்த நாடு தனது நாட்டு மாடுகளுக்கு முதன் முதலில் மாட்கௌ நோய் ஏற்பட்டிருப்பதாக உத்தியோக பூர்வமாக அறிவித்தது?
அமெரிக்கா

465) ஆசிய கால்பந்து கூட்டமைப்பு எத்தனையாம் ஆண்டு முதல் சிறந்த கால்பந்து வீரர்களைத் தேர்ந்தெடுத்துக் கௌரவித்து வருகிறது?
1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

466) 2003 பெப்ரவரி மாதம் அமெரிக்க விண்கலம் ஒன்று பூமிக்கு திரும்புகையில் டெக்ஸாஸ் மீது வெடித்துச் சிதறியது. இச்சம்பவத்தில் இஸ்ரேலியரான இலான் ராமொன் மற்றும் இந்தியாவில் பிறந்த கல்பனா சவ்லா ஆகிய இருவர் உட்பட 7 விண்வெளி வீரர்கள் பலியாகினார். அவர்களைப் பலி கொண்ட விண்கலத்தின் பெயர் என்ன?
கொலம்பியா

467) ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுப்பதைப் பகிரங்கமாக எதிர்த்த மூன்று நாடுகளும் எவை?
பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா

468) பிரிட்டனில் குளோனிங் மூலம் முதன் முதலாகப் பிறக்க வைக்கப்பட்ட டோலி ஆடு மர்மவியாதியால் பாதிக்கப்பட்ட தால் எத்தனையாம் ஆண்டு விஷ ஊசி ஏற்ற கருணைக் கொலை செய்யப்பட்டது?
2003 பெப்ரவரி 14

469) ஐ.நா 13 வருடங்களாக ஈராக் மீது விதித்திருந்த தடைகளைப் பாதுகாப்பு சபை எப்போது நீக்கியது?
2003 மே 22

470) 2005 ஆம் ஆண்டில் பலஸ்தீன நாட்டை உருவாக்கும் ஆலோசனைகளைக் கொண்ட மத்திய கிழக்கு சமாதானத் திட்டம் அமெரிக்கா, ரஷ்யா, ஐ.நா, ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றால் தயாரிக்கப்பட்டு எப்போது வெளியிடப்பட்டது?
2003 ஏப்பிரல் 30

471) 2003 மார்ச் 12 ஆம் திகதி மாபியா அமைப்புடன் தொடர்புள்ள பொலீஸ்பாரர் ஒருவரால் பெல்கிரேட் வீதியில் சுட்டுக்கொல்லப் பட்ட ஸோரான் டிஜின்ட ஜிக் எந்த நாட்டின் பிரதமராவார்?
சொபியா

472) ஆர்மினியா, அசர்பைஜான், ரஷ்யா, துருக்கி ஆகிய நாடுகளைத் தவிர்ந்த 41 அங்கத்துவ நாடுகள் கையெழுத்திட்ட மரண தண்டனையைத் தடைசெய்யுமம் ஐரோப்பிய மனித உரிமை பிரகடனத்தை ஐரோப்பிய சமூகம் எப்போது வெளியிட்டது?
2003 ஜுலை 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

473) ஈராக் மீது போர் தொடுப்பதற்காக ஈராக்கிடம் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக மிகைப்படுத்திய பிரசாரத்தை பிரிட்டன் மேற்கொள்வதாக பி.பி.சி செய்தி வெளியிட்டிருந்தது. இச் செய்தியின் பின்னணியில் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சின் ஆயுதநிபுணர் ஒருவர் இருப்பதாக சந்தேகம் எழுந்ததைத் தொடர்ந்து அவர் 2003 ஜுலை 17 தற்கொலை செய்து கொண்டார். அந்த ஆயுத நிபுணரின் பெயர் என்ன?
டேவிட் கெலி

474) முன்னாள் பொஸ்னிய செர்பிய ஜனாதிபதி மிலோசெவிச்சிற்கு யூகோஸ்லாவாவியாவுக்கான சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் 2003 பெப்ரவரி 27 ஆம் திகதி எத்தனை வருட சிறைத் தண்டனையை விதித்தது?
11 வருடங்கள்

475) முஸ்லிம்களுக்கும் குரோஷியர்களுக்கும் எதிராக யுத்தக் குற்றம்புரிந்தமை நிருபிக்கப்பட்டதால் 2002 ஜுலை 31 சர்வதேச நீதிமன்றத்தால் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட பொஸ்னிய செர்பிய டொக்டரின் பெயர் என்ன?
மிலோமிர் ஸ்டாசி

476) 54 வருடங்களின் பின் 2003 ஒகஸ்ட் 11 ஆம் திகதி ஐரோப்பாவுக்கு வெளியே நோட்டோ அமைப்பு முதன் முறையாக எந்த நாட்டில் உள்ள சர்வதேச பாதுகாப்புப் படையை உத்தியோக பூர்வமாக தனது பொறுப்பின் கீழ் கொண்டுவந்தது?
ஆப்கானிஸ்தான்

478) அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதியிலும் கனடாவிலும் 29 மணிநேர பாரிய மின் தடையினால் 50 மில்லியனுக்கும் அதிக மான மக்கள் பாதிக்கப்பட்டனர்.இச் சம்பவம் எப்போது நடைபெற்றது?
2003 ஒகஸ்ட் 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

479) சுவீடன் மக்களை யூரோ நாணயத்தை ஏற்கவைப்பதற்கான பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது 2003 செப்ரெம்பர் 10 ஆம் திகதி கத்தியால் குத்தப்பட்டு கொல்லப்பட்ட சுவீடன் நாட்டு வெளிவிவகார அமைச்சரின் பெயர் என்ன?
அனா லிண்ட்

480) லொக்கர் பீ குண்டுத்தாக்குதலில் பலியானோரின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க எந்த நாடு சம்மதித்ததைத் தொடர்ந்து ஐ.நா.1992 ஆம் ஆண்டு அந்த நாட்டின் மீது விதித்திருந்த தடைகளை 2003 செப்ரெம்பர் 12 ஆம் திகதி நீக்கியது?
லிபியா

481) மலேசியப் பிரதமர் மஹாதிர் முாம்மத் 2003 ஒக்டோபர் 31 ஆந் திகதி தனது பதவியில் இருந்து விலகினார். அவர் எத்தனை வருடங் கள் மலேசியாவின் பிரதமராகப் பதவி வகித்தார்?
22 வருடங்கள்

482) ஈராக்கில் முக்கியமான யுத்தம் முடிவுற்றதாக கலிபோர்னிய கடற்பகுதியில் நிலைகொண்டிருந்த டி.எஸ்.எஸ். ஆபிரகாம் லிங்கன் கப்பலில் இருந்து ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் எத்தனையாந் திகதி அறிவித்தார்?
2003 மே 1

483) இலங்கை இங்கிலாந்து அணிகளுக்கிடையில் எஸ்.எஸ்.ஸி மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் நசார் ஹுசைனின் விக்கெட்டைக் கைப்பற்றியதன் மூலம் உலகிலேயே ஒரே மைதானத்தில் 100 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்று உலக சாதனை நிலைநாட்டிய இலங்கைப் பந்து வீச்சாளரின் பெயர் என்ன?
முத்தையா முரளிதரன்

484) இலங்கையில் அரசியல் நெருக்கடி தோன்றிய காலகட்டத்தில் கொழும்புக்கு வந்து கிளிநொச்சியில் சென்று (2003 நவம்பர் 26) விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்த ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார ஆணையாளரின் பெயர் என்ன?
கிறஜ் பற்றன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

485) இந்தியாவில் முதன் முதலில் மின்வாக்குப் பதிவுக் கருவி எத்தனையர் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு பரீட்சித்துப் பார்க்கப்பட்டது?
1983

486) இலங்கையில் புகழ்பெற்ற நொக்கியா செல்லிடத் தொலை பேசியை உலகிற்கு அறிமுகம் செய்த நாடு எது?
பின்லாந்து

487) இந்தியாவின் முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் பிறந்தநாளுக்காக (2003 டிசம்பர் 25) மூவாயிரம் கிலோகிராமில் 26 சமையற் கலைஞர்களால் தயாரிக்கப்பட்ட இராட்சத லட்டு எந்த உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது?
லிம்கா சாதனைப் புத்தகத்தில்

488) உலகிலே உலெக்ரோனிக் கழிவுகளை அதிகமாக உருவாக்கும் நாடு எது?
அமெரிக்கா

489) விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் சுயசரிதையை TIGERS OF LANKA என்ற தலைப்பில் (1994 ஆம ஆண்டு வெளிவந்த ஆங்கில நூலை எழுதிய இந்தியப் பத்திரி கையாளரின் பெயர் என்ன?
எஸ்.நாராயணசாமி

490) 2006 ஆம் ஆண்டு டோஹாவில் நடைபெற்ற விளையாட்டில் முதன்முறையாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட விளையாட்டு எது?
செஸ்

491) அதிவேக புல்லடட் ரயில் மணிக்கு 270 கிலோமீற்றர் வேகத்தில் செல்லக்கூடியது. இந்த ரயிலை முதன் முதலில் சேவையில் ஈடுபடுத்திய நாடு எது?
ஜப்பான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*492)* தன்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் தான்பட்ட துன்பங்களை அடுத்த தலைமுறையினர் அனுபவிக்ககூடாது என்பதற்காக கட்டிங் எட்ஜ்மை ஆட்டோ பயோகிராபி என்ற பெயரில் தனது சுயசரிதையை எழுதி நூலாக வெளியிட்ட பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கெட் வீரரின் பெயர் என்ன?
ஜாவிட் மியான்டாட்

*493)* இலங்கை அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் நடைபெற்ற **(15.01.2002)** ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அயிவீரர் ரஸல் ஆர்னலட்டை கடுமையான வார்த்தை களால் நிறவெறியைத் தூண்டும் வகையில் திட்டியமைக்காக ஐ.சி.சியினால் தண்டனைக்குள்ளான உலகின் முதல் கிரிக்கெட் வீரர் என்ற அவப்பெயரைப் பெற்ற அவுஸ்திரேலிய வீரரின் பெயர் என்ன?
டெரல் லேமன்

*494)* ஈராக்கில் பேரழிவு ஆயுதங்களைத் தேடும் பணிக்கு நியமிக் கப்பட்டிருந்த ஐ.நா.ஆயுதப் பரிசோதனைக் குழுவுக்கு தலைமை தாங்கியவர் யார்?
ஹான்ஸ் பிளிக்ஸ்


*495)* உலகின் 11 மொழிகளில் வெளிவந்துள்ள "மை சைட்" என்ற சுயசரிதை நூலை எழுதி வெளியிட்டுள்ள இங்கிலாந்து கால்பந்து வீரரின் பெயர் என்ன?
டேவிட் பெக்கம்

*முற்றும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி



சின்னையா + நாகம்மா
சிவபாக்கியம் (அமரர்)
சிவபிரகாசம் (அமரர்)
பத்மநாதன்
[redacted]
கனகராசா
மாரிமுத்து நாகமணி
சின்னையா + நாகம்மா
குட்டிஅம்மா
நாகம்மா
செல்லம்மா
ஆறுமுகம்
சின்னத்துரை
வேலுப்பிள்ளை + சின்னம்மா
புவனேஸ்வரி
சரஸ்வதி
பரமேஸ்வரி
அன்னலஷ்மி
நாகேஸ்வரி (அமரர்)
லோகேஸ்வரி (அமரர்)
இராஜேஸ்வரி
நாகராஜா
தர்மசேனா
கோபிகா
லவகோபன்
கௌசிகா
சசிக்கா
தர்சிகா
தமிழ்ச்செல்வி
கிருஷ்ணவேணி
ரஜிதா
(மூவரும் கனடா)
சுபாஜினி
(கனடா)
சுபன்
சுமன்
சுஜிதா
சிவாரகா
துவாரகா
லதுசன்
லதுர்ஷிகா
நிதுர்ஷிகா

# நன்றி நவில்கின்றோம்



எமது குடும்பத் தலைவியாய் அன்புத் தெய்வமாய்
நல்வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்த
எமது அன்புத் தெய்வம்
சிவபதம் அடைந்த செய்தி கேட்டு உடன் வந்து
எமக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்த
அயலவர்களுக்கும், உடனிருந்து ஆறுதல்
கூறிய உறவினர்களுக்கும்
வெளிநாடுகளில் இருந்துஎம்முடன்
துயரினைப் பகிர்ந்து ஆறுதல் கூறியவர்களுக்கும்
இறுதிக் கிரியையில் கலந்து கொண்ட
அன்புள்ளங்களுக்கும் இம்மலரினை அழகுற
அமைத்துத் தந்த அன்ரா அச்சகத்தாருக்கும்,
எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்த
அனைவரிற்கும் எமது மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.



கோண்டாவில்.

இவ்வண்ணம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்".
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-






ANDRA பிறிண் [illegible] K.K.S. [illegible] சந்தி, கோண்டாவில். T.P-021 4590268

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org